# அம்பாறை மாவட்டத்தின் நிலப்பிரச்சனைகளும் குடியேற்றப் பிரச்சனைகளும்

## சிறுபான்மைச் சமூகத்தினரை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமூக பொருளாதார அரசியல் ரீதியான விளக்கம்

எம். வை. மொஹமட் சித்தீக்

அறிமுகம் :

அம்பாறை மாவட்டம் 1752·4 சதுர மைல்கள் (4539·34 சதுர கிலோ மீட்டர்) பரப்பினைக் கொண்டது. இது இலங்கையிலுள்ள பரப்பில் கூடிய மாவட்டங்களில் ஒன்ருகக் கருதப்படுகின்றது. இது ஒரு செறிவு குறைந்த மாவட்டமும் ஆகும். செறிவு குறைவாக இருப்பதற்குக் காரணம் பெரும் பகுதி நிலம் வளம் உள்ள, நெற்பயிர்ச் செய்கைக்குரிய நிலமாகக் காணப் படுவதாகும். பெரும்பாலான மக்களின் ஜீவனோபாயத்தின் மூலதாரமாக நெற்பயிர்ச் செய்கையே அமைந்துள்ளது. இம் மாவட்டத்தில் மொத்தமாக 3,88.786 மக்கள் வாழ்கிருர்கள். இவர்களுள் 1,61,754 முஸ்லீங்களும், 1,46,371 சிங்களவர்களும், 78,315 இலங்கைத் தமிழர்களும் வாழ்கிருர் கள். விகிதாசார ரீதியாக கூறுவதானுல் இலங்கைச் சோனகர்களும், சிங் களவர்களும் இலங்கைத் தமிழர்களும் முறையே 41·6%, 37·6%, 20·1% தினராகவுள்ளனர். இது ஐந்து பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண் டது. தனி அங்கத்தவர் தொகுதிகள் மூன்றும் இரட்டை அங்கத்தவர் தொகுதி ஒன்றும் இதனுள் அடங்குகின்றன. வரலாற்றினைப் பின் நோக்கிப் பார்த்தால் இம் மாவட்டத்தின் பூர்வீகக் குடிகளாக முஸ்லீம்கள் உள்ளனர். இவர்களது வரலாறு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளையுடையது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக இந் நாட்டின் நிரந்தரக் குடிகளாக வாழ்ந்து வந்துள்ள அராபியர்களின் வழித் தோன்றல்கள் இவர்கள். முஸ்லீம்களின் ஒரு பரம்பரைத் தாயகமாகத் திகழ்வதும் இம் மாவட்டமாகும். இலங்கை முஸ்லீம்களுக்கென இருக்கின்ற ஒரேயொரு முஸ்லீம் மாவட்டமும் இது வாகும். முஸ்லீம்களை ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் எனக் கூறிக் கொள்வதற்கு இருக்கின்ற ஒரேயொரு ஆதாரமும் இம் மாவட்டமே. இம் மாவட்டத்தின் வந்தேறு குடிகளாகச் சிங்களவர்கள் உள்ளனர். இவர்களது வரலாறு 1647ல் இருந்தே ஆரம்பிக்கின்றது. 1947ம் ஆண்டில் 1394 சிங் களவர்கள் மட்டுமேகாணப்பட்டனர்.

அரசாங்கங்களின் குடியேற்றக் கொள்கையினுலும் பிரதேச இணைப்புக் கொள்கையினுலும் இன்று 1, 46, 371 க்கு மேற்பட்ட சிங்களவர்கள் வாழ் கின்ருர்கள். இங்கு மொத்தமாக பதினெரு உப அரசாங்கஅதிபர் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் நான்கு சிங்களப் பகுதிகட்குரியவை. மீதி முஸ்லீம் தமிழ்ப் பிரதேசங்கட்குரியவை.

இங்குள்ள நெற்காணிகளில் பெரும் பகுதி ஐந்தாம் ஜோர்ஜ் மன்ன ரால் முஸ்லிம்கட்கு இனாமாக வழங்கப்பட்டவை.

## இன்றைய எமது பிரச்சினைகள்:

இங்கு அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் இன்று எதிர்நோக்குகின்ற பிரச் சினைகளையே முக்கியமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். இதுவே எனது கட்டுரையின் நோக்கமாகும். முன்பு கூறியபடி இதுவரை காலமும் இலங்கை யிலுள்ள 24 மாவட்டங்களிலும் முஸ்லிம்கட்கென இருந்த ஒரேயொரு மாவட்டமானது சிங்களக் குடியேற்றம், காணிச் சுவீகரிப்பு, பிரதேச இணைப்பு, புதைபொருளாராய்ச்சி, புனித பிரதேசப் பிரகடனம் போன்ற பல நடவடிக்கைகளினால் இன்று ஒரு சிங்கள மாவட்டமாக மாறிக் கொண்டு வருகின்றது. அம்பாறை மாவட்டம் ஒரு சிங்கள மாவட்டமாக மாற வேண்டும் என்ற எண்ணம் ஆரம்பகாலத்திலிருந்தே சிங்களத் தலை வர்கட்கு இருந்து வந்துள்ளது என்பதை 1941 ஆம் ஆண்டு விவசாய அமைச்சராக இருந்த டீ. எஸ். சேனநாயக்காவின் பேச்சு உறுதிப்படுத்து கின்றது. அதாவது டீ. எஸ். சேனநாயக்கா கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முதல் மரத்தினைச் சம்பிரதாய பூர்வமாகத் தனது கை யால் வெட்டி அத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தபோது பின்வருமாறு கூறினார்.

''இன்று என்னால் வெட்டப்பட்ட முதல் மரம் இப்பிரதேச அபிவிருத் தியில் முதற்கருவாக்கத்தின் மூலக்கூறு. இக்கரு தொடர்ந்து வளர்ச்சி யடைய வேண்டும். இக்கரு சிதைவுறாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இது இப்பிரதேச மக்களின் தலையாய கடமையாகும். கடற்கரைப் பிரதே சத்திற்குள் அதிகமான மக்கள் இங்கு வாழ்கிறார்கள். இம்மக்கள் கல் லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வாழவேண்டும். அவ்வாறு அவர் கள் இங்குவந்து குடியேறவிட்டால் பிறபிரதேசத்தவர்கள் இங்கு வந்து குடி யேறுவார்கள்,'' இப்பேச்சில் கடைசி வசனம் எமக்கு எதனை உணர்த்து கின்றது? ''பிற பிரதேசத்தவர்கள்'' என்றால் யார்? சிங்களவர்களைவிட வேறு யார் பிறதேசத்திலிருந்து வரக்கூடியவர்கள். ''வெளியாரை'' அம்பாறை மாவட்டத்தினுள் கொண்டுவந்து குடியேற்றவேண்டும், என்ற எண்ணம் கல்லோயாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலிருந்தே டீ. எஸ். சேனநாயக்கா போன்றோருக்கு இருந்துள்ளது என்பதை இது உணர்த்து கின்றது. உண்மையில் அவர் எண்ணப்படி 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் 38 சிங்களக் கிராமங்கள். இவற்றில் குடி யேற்றப்பட்ட சிங்களவர்கள் அனைவரும் வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்டவர்கள். இன்றும் இதன் பிரதிபலிப்பை அம்பாறை மாவட்டத்தில் கண்டுகொண்டிருக்கிறோம். எனவே கல்லோயா அபிவிருத் தித்திட்டம் ஒரு வகையில் முஸ்லிம்கட்கெதிரான ஒரு திட்டமிட்ட சதி யாகவே அமைந்து விட்டது. இதன் விளைவுதான் இலங்கை முஸ்லீம் களின் தாயகமான அம்பாறை மாவட்டத்தினை சிங்களவர்களிடம் பறி கொடுக்க கூடிய அண்மித்த ஒரு நிலையில் இருக்கிறோம்.

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் கொண்டு வரப்பட முன்னர் சிங் களவர்களே இப்பிரதேசத்தின் மிகச் சிறுபான்மையினராக இருந்தனர்.

முதலாவது பெரும்பான்மையினராக முஸ்லீம்களும், இரண்டாவது பெரும்பான்மையினராக தமிழர்களும் வாழ்ந்தார்கள். ஆனால் இன்று சிங்களவர்களினதும் முஸ்லீம்களினதும், எண்ணிக்கையில் மிகச் சிறு வித்தியாசமே காணப்படுகின்றது. 1982ஆம் ஆண்டில் முஸ்லீம்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் 11858 வாக்காளர் எண்ணிக்கை மட்டுமே வித்தியாசம் காணப்பட்டது. அதாவது ஒருகாலத்தில் முஸ்லீம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய மூவகையினரதும் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களாக — மூன்றும் பிரஜையாக வாழ்ந்த சிங்களவர்கள் அதாவது தமிழர்கள் எண்ணிக்கையின் விடவும் குறைவாக இருந்தவர்கள், தமிழரின் எண்ணிக்கையைத் தாண்டி இரண்டாம் இடத்துக்கு வந்து, இன்று முஸ்லீம்களின் எண்ணிக்கையினையும் தாண்டி முதலாம் இடத்திற்கு அதாவது அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையினத்தவராக மாறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மொத்த சனத்தொகை ரீதியாகப் பார்க்கையில் 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1981ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுகளில் இம்மாவட்டத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை 78% இனால் அதிகரித்துள்ளது. ஆனால் முஸ்லீம்களின் எண்ணிக்கை 27% இனாலும் தமிழர்களின் எண்ணிக்கை 25.7% இனாலும் மட்டுமே அதிகரித்துள்ளது.

| | 1971 | 1981 | 10 ஆண்டுகளில் அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|
| சிங்களவர்கள் | 82,280 | 146,371 | 78% |
| முஸ்லீம்கள் | 127,308 | 161,754 | 27% |
| தமிழர்கள் | 62,290 | 78,315 | 25.7% |

இங்கு முஸ்லீம்களினதும், தமிழர்களினதும் அதிகரிப்பு விகிதாசாரமானது இயற்கை அதிகரிப்பு விகிதாசாரத்தை ஒத்திருப்பதையும், சிங்களவர்களது அதிகரிப்பு விகிதாசாரம் இயற்கை அதிகரிப்பு விகிதத்தின விட மும்மடங்காக இருப்பதையும் அவதானிக்கலாம்.

மொத்தச் சனத்தொகையின் விகிதாசார ரீதியாகப் பார்க்கையில் 1971 ஆம் ஆண்டு மொத்த சனத்தொகையில் முஸ்லீம்கள் 50% இனராகக் காணப்பட்டனர். இன்று இவர்கள் 41.6%இனராகக் குறைந்து காணப்பட 1971ல் 30.1% இனராக காணப்பட்ட சிங்களவர்கள் 37·6%இனராக அதிகரித்துக் காணப்படுகின்றனர்.

| | முஸ்லீம்கள் | சிங்களவர்கள் | தமிழர்கள் |
|---|---|---|---|
| 1971 | 50.0% | 30.1% | 28.26% |
| 1981 | 41.6% | 37.6% | 20.01% |

இப்போக்கு இலங்கையை மாறிமாறி ஆண்டுவருகின்ற சிங்கள அரசாங்கங்களின் திட்டமிட்ட குடியேற்ற வாதத்தின் தீவிரத் தன்மையையே காட்டுகின்றது.

**பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்:**

இதன் முக்கிய விளைவுகளில் ஒன்று நாம் எமது பிரதிநிதித்துவத்தை இழந்து கொண்டிருக்கிறோம். கல்லோயாத் திட்டத்திற்கு முன்னர் உள்ள

சனத்தொகையின்படி (அம்பாறை மாவட்டம் 4 பிரதிநிதித்துவத்தைக் கொண்டது என எடுத்துக் கொண்டால்) மூன்று பிரதிநிதித்துவம் முஸ்லிம்கட்கும், ஒரு பிரதிநிதித்துவம் தமிழர்கட்கும் கிடைக்க வேண்டும். சிங்களவர்கட்கு ஒரு பிரதிநிதித்துவமேனும் கிடைக்க வாய்ப்பில்லை. கல்லோயாத்திட்டமோ அல்லது சிங்களக் குடியேற்றத் திட்டமோ ஏற்படுத்தப்படாமல் இருந்திருந்தால் இன்று கூட இந்நிலையே காணப்படும் (ஏனெனில் 1947ஆம் ஆண்டில் சிங்களத் தொகுதியான அம்பாறையோ, அதற்கென ஒரு பிரதிநிதியோ இருக்கவில்லை. 1963ஆம் ஆண்டிற்கு முன்னர் அம்பாறை என இன்று அழைக்கப்படும், அன்றைய பின்தங்கிய பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது). ஆனால் 1981 இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலில் மேற்கூறிய மூன்று பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாக ஒரு பிரதிநிதித்துவம் மட்டுமே முஸ்லிம்கட்குக் கிடைத்துள்ளது. (இத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடாததை ஒருபுறம் வைத்துக் கொள்வோம்)

மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலில், சிறிலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிட்டு இருந்தாலும் கூட இன்றைய மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளை எம்மால் பெற்றுக் கொள்ள முடியாமலேயே இருந்திருக்கும். 1982 ஒக்டோபர் 20ஆந் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் புள்ளிவிபரங்களை வைத்துக்கொண்டு 1981 இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலைப் பின்னோக்கிப்பார்த்தால், சிறி லங்கா சுதந்திரக்கட்சிப் பட்டியலில் முதலாம் இடமும், மூன்றும் இடமும், இரண்டு முஸ்லிம்கட்குக் கொடுக்கப்பட்டிருக்கும். ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் முதலாம் இடமும், நான்காம் இடமும் வழங்கப்பட்டன. (முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் மாவட்டத்தின் பட்டியலில் முஸ்லிம்கட்கு 4ஆம் இடம் வழங்கப்படுவது சற்று ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று). கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புள்ளிவிபரங்களை அலசி ஆராய்ந்து பார்க்கையில் அதன் விபரம் வருமாறு.

| | |
|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை | 1,60,970 |
| ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகள் | 90,772 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி பெற்ற வாக்குகள் | 53,096 |

அளிக்கப்பட்ட வாக்குகளில் 1/8பங்கு, 20,121 வாக்குகள், போட்டியிட்ட ஏனைய கட்சிகள் 1/8 பங்குக்குக் குறைவான வாக்குகளைப் பெற்றபடியால் அவை நிராகரிக்கப்படுகின்றன. மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தின் மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை நான்கு. எனவே ஒரு கட்சியிலிருந்து ஒரு பிரதிநிதி தெரிவு செய்யப்படுவதற்கு 40,242 வாக்குகளைப்பெறல்வேண்டும். (அதாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் மொத்தத்தை பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கையால் பிரிக்க வருவது). இதன்படி ஐக்கிய தேசியக் கட்சிக்கு இரண்டு ஆசனங்களும் ,சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு ஆசனமும் கிடைக்கும். இதன் பின்பு ஐக்கிய தேசியக் கட்சியிடம் மீதியாக இருக்கும் வாக்குகள் $90,772 - (40,242 \times 2) = 10,288$ ஆகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் $53,096 - (40,242) = 12,854$ வாக்குகளும் மீதியாக உள்ளன. எனவே

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இன்னொரு ஆசனம் மேலதிகமாகக் கிடைக்கும். இதன்படி ஐக்கிய தேசியக்கட்சி பெற்ற மொத்த ஆசனங்கள் இரண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி பெற்ற மொத்த ஆசனங்கள் இரண்டு. எனவே பட்டியலில் உள்ள ஒழுங்கின்படி இரண்டு சிங்களவர்களும், இரண்டு முஸ்லீம்களும் தெரிவு செய்யப்படுவர். எனவே இதனைத் தற்போதுள்ள பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் சிங்களப் பிரதிநிதித்துவம் ஒன்றிலிருந்து இரண்டாக அதிகரிக்கின்றது. முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம், மூன்றாக இருந்து இரண்டாகக் குறைகின்றது. தமிழர்களின் பிரதிநிதித்துவம் ஒன்றிலிருந்து 0ஆகக் குறைந்து விட்டது.

எனவே சிறுபான்மையினராகிய முஸ்லீம்களினதும், தமிழர்களினதும் பிரதிநிதித்துவம் எவ்வொன்றும் குறைவதை இங்கு அவதானிக்கலாம். இவ் வுதாரணம் எதனைக் காட்டுகிறது எனின் சிறுபான்மை இனமென்று பெரும்பான்மையினருடன் கூட்டுச்சேர்வதால் அல்லது அவர்கட்கு ஒத்துழைப்புக் கொடுப்பதால் பாதிப்புறுபவர்கள் அல்லது இழப்பவர்கள் சிறுபான்மையினராகவும், நலம்பெறுபவர்கள் பெரும்பான்மையினராகவும் இருப்பர் என்பதையே. அதாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டுமுன்னணி போட்டி இடவில்லை. ஆனாலும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களுடைய ''விழுந்த வாக்குகளில்'' பெரும்பாலானவை பிரதான கட்சிகள் இரண்டில் ஒன்றுக்கே விழுந்தது என்பது ஒரு வெளிப்படையான உண்மை. தமிழர் விடுதலைக் கூட்டுமுன்னணி ஒரு பிரதான கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டிருந்தாலும் இதே நிலைமைதான் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும். அதாவது பிரதான சிங்களக்கட்சி ஒன்றிற்கு பெரும்பாலான வாக்குகள் விழுந்திருக்கும். எனவே ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற அதே திகதியில் ஒரு மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல் நடைபெற்று பிரதான கட்சியொன்றுடன் கூட்டுச்சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி போட்டியிட்டிருந்தால் ஒரு பிரதிநிதித்துவம்கூடக் கூட்டணிக்குக் கிடையாது. ஏனெனில் மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை நான்கு. எந்தப் பிரதான கட்சியும் கூட்டணிக்கு இரண்டாம் இடத்தினைக் கொடுக்காது. அவ்வாறுயின் மேற்கூறியவாறு இரண்டு பிரதான கட்சிகளில் இருந்தும் இவ்விரண்டு பிரதிநிதிகள் (ஒருமுஸ்லீமும், ஒரு சிங்களவரும்) தெரிவுசெய்யப்பட்டால் ஒரு தமிழர் எப்படி வருவது? ஆனல் தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி தனித்துப் போட்டியிட்டால் அக்கட்சி மூலம் ஆகக் குறைந்தது ஒரு பிரதிநிதியாவது தெரிவு செய்யப்படுவார் என்பது எமது வரலாற்று அனுபவம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி போட்டியிட்டிருந்தால் இந்த விளக்க ஆய்வு வேறுவிதமாக அமைந்திருக்கும். இதே உதாரணத்திலிருந்து பார்த்தால் யு. என். பி. க்கு இரண்டு ஆசனங்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு ஆசனமும்போக மீதியாக ஒவ்வொரு கட்சியிடமும் முறையே 10,288, 12,854 வாக்குகள் இருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டுமுன்னணி போட்டியிட்டிருந்தால் இந்த மீதிவாக்குகளைவிடக் கூடுதலாகவே நிச்சயம் பெற்றிருக்கும். எனவே மூன்று கட்சிகட்கும் இடையில் பிரதிநிதிகளின் நிலை முறையே 2 : 1 : 1 என அமைந்திருக்கும். இதன்படி பார்த்தால் இரண்டு முஸ்லீம்களும், ஒரு சிங்களவரும், ஒரு

தமிழரும் பிரதிநிதியாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. எவ்வாறுயினும் முஸ்லீம் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மூன்றில் இருந்து இரண்டாகக் குறைக்கப்படுவது இங்கு தவிர்க்க முடியாததாக அமைந்துள்ள ஒரு நிலையினை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். எனவே முஸ்லீம்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதியே இப்பொழுது நடைபெறுகின்றது என்பதை இது உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையில் எதிர்காலத்தில் ஒரு பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடக்குமாயிருந்தால் அம்பாறை மாவட்டத்தின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையினை ஆறுக அதிகரிக்க இருக்கின்றார்கள். அவ்வாறுயின் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில், பிரதிநிதித்துவம் மூன்று இனங்கட்கும் இடையில் எவ்வாறு இருக்கும் என்பதைப் பின்வரும் விபர ஆய்வு விளக்குகின்றது.

| | |
|---|---|
| ஏற்றுக்கொண்ட வாக்குகள் | 160,970 |
| ஐக்கிய தேசியக் கட்சி பெற்றது | 90,772 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி பெற்றது | 53,096 |

மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 1/8 பங்குக்குக் குறைவாகப் பெற்ற ஏனைய கட்சிகள் யாவும் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படுகின்றன. ஆறு பிரதிநிதித்துவம் என்றபடியால் ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெற ஒரு கட்சி 26,328 (மொத்த ஏற்றுக்கொண்ட வாக்குகளை மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையாற் பிரிக்க வருவது) வாக்குகளைப் பெற வேண்டும். இதன்படி ஐக்கியதேசியக் கட்சிக்கு மூன்று பிரதிநிதிகளும், சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு ஒரு பிரதிநிதியும் கிடைக்கும். ஐக்கியதேசியக் கட்சிக்கு மீதியாக 10,288 $(90,772-(26,828\times 3))$ வாக்குகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இன்னும் மீதியாக $(53,096-26,828)=26,268$ வாக்குகளும் உள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டுமுன்னணி போட்டியிட்டிருந்தால் நிச்சயமாக ஐக்கியதேசியக் கட்சிக்கு மிச்சமாகவுள்ள 10,288 வாக்குகளை விடக் கூடுதலாகப் பெற்றிருக்கும். இதேவேளை இன்னும் இரண்டு ஆசனங்கள் மீதியாக உள்ளன. எனவே தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணிக்கு ஒன்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மேலும் ஒன்றும் கிடைக்கும். எனவே மொத்தமாக யு. என். பி., எஸ். எல். எ. பி., ரி. யு. எல். எவ். ஆகியவற்றிற்கு முறையே 3 : 2 : 1 என்றவாறு ஆசனங்கள் கிடைக்கும். ஐக்கியதேசியக் கட்சியின் பட்டியலில் 1ஆம், 4ஆம் இடங்களில் முஸ்லீம்கள் இருப்பதனுல் ஒரு முஸ்லீம் பிரதிநிதியே ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட முடியும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பட்டியலில் முஸ்லீம்கள் 1ஆம், 3ஆம் இடங்களில் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்க முடிந்தாலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மொத்த ஆசனம் இரண்டு ஆதலால் அதிலும் ஒரு முஸ்லீம் பிரதிநிதியே தெரிவு செய்யப்படுவார். எனவே முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைத் தற்போதுள்ள ஐந்தில் இருந்து ஆறுக அதிகரித்தும்கூட முஸ்லீம் பிரதிநிதிகளின் எண்ணிக்கை தற்பொழுதுள்ள மூன்றிலிருந்து இரண்டாகக் குறைகின்றது. இதேவேளை சிங்களப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை தற்போதுள்ள ஒன்

றில் இருந்து இரண்டாக அதிகரிக்கின்றது. ஏனெனில் இரண்டு பிரதான கட்சிகளினதும் பட்டியல்களில் இரண்டாம் இடத்தில் இரண்டு சிங்களவர்கள் இருப்பதனால். இந்த விளக்கம் உண்மையில் விகிதாசாரப் பிரதிநிதித்தவ முறையானது முஸ்லீம்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கு ஒரு முக்கியகாலாக அமைகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இதை விடப் பாதகமான ஒரு உதாரணம் என்னவெனில் மொத்தச் சனத்தொகையில் 1/4 பங்கு முஸ்லீம்கள் வாழ்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தில் (79,662 பேர் முஸ்லீம்கள்) ஒரு முஸ்லீம் பிரதிநிதிகூட மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலில் தெரிவுசெய்யப்படாமையாகும். தொகுதி ரீதியான தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு முஸ்லீம் பாராளுமன்ற அங்கத்தவர் கூட இன்று இம்மாவட்டத்தில் இருக்கின்றார். விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை இருக்குமாயின் மட்டக்களப்பில் பாராளுமன்றத் தேர்தலிலும் ஒரு முஸ்லீம் பிரதிநிதி தெரிவுசெய்யப்படமாட்டார். இனிமேல் இவர்கட்கு (79,662 பேருக்கும்) ஒரு பிரதிநிதி கிடையாது. இதேநிலைதான் பலாங்கொடை, பொரளை முஸ்லீம்கட்கும் நடைபெறப் போகின்றது. எனவே சிலமாவட்டங்களில் முஸ்லீம்கள் அறவே பிரதிநிதித்துவத்தை இழக்கக்கூடிய ஒரு பயங்கரமான எதிர்காலத்தை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமூலம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றோம். அம்பாறை மாவட்டத்தில் மேற்கூறியவாறு முஸ்லீம் ஒருவருக்குப் பிரதான கட்சிகள் முதலிடம் கொடுப்பதுகூட இன்னும் சிலவருடங்கட்கு மட்டும்தான் நிலைக்கப்போகின்றது. இன்றைய விகிதத்தில் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டு சென்றால் முஸ்லீம் பிரதிநிதித்துவம் மட்டக்களப்பு மாவட்டத்தைப்போல் அம்பாறையிலும் அறவே இல்லாமற் போகுமா என்ற அச்சம் அவதானிகள் பலருக்கு ஏற்படத் தொடங்கியுள்ளது. அவ்வாறாயின் அம்பாறை மாவட்ட முஸ்லீம்களின் வாக்குகள் எதிர்காலத்தில் ஒரு சிங்களவருக்கே விழப்போகின்றது.

மேலே விளக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி போட்டியிடவில்லை. எனவே இது சரியான கணிப்பீடாக இருக்கமாட்டாது எனச் சில அரசியல் அவதானிகள் வாதிடக்கூடும். அதற்காக எல்லாப் பிரதான கட்சிகளும் போட்டியிட்ட 1977 ஆம் ஆண்டைய புள்ளிவிபரங்களின் அடிப்படையில், அத்தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் நடைபெற்றிருந்தால், அம்பாறை மாவட்டப் பிரதிநிதித்துவம் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை இங்கு தருகின்றேன்.

*அம்பாறை மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 182,516*
*அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகள் 81,174*
*அம்பாறை மாவட்டத்தில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி பெற்ற வாக்குகள் 46,914*
*அம்பாறை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி பெற்ற வாக்குகள் 39,698*
*அம்பாறை மாவட்டத்தில் சுயேட்சை பெற்ற வாக்குகள் 12,698*
*அம்பாறை மாவட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சி பெற்ற வாக்குகள் 945*

எதிர்காலத்தில் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறுமாக இருப்பின் அம்பாறை மாவட்டத்தின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 6 அல்லது 7 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாம் 6 என எடுத்துக்கொள்வோம். அளிக்கப்பட்ட வாக்குகளில் 1/8 பங்குக்குக் குறைவாக எடுத்த சுயேட்சையும், லங்கா சமசமாஜக்கட்சியும் போட்டியிலிருந்து நிராகரிக்கப்படுகின்றன. எனவே ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் பெற்ற மொத்த வாக்குகள் $(81,174+46,914+39,698)=167,786$ ஆகும். எனவே ஒரு பிரதிநிதித்துவத்திற்கு ஒரு கட்சி எடுக்க வேண்டிய வாக்குகள் 27,946. எனவே முதலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 2 ஆசனங்களும், சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கு 1 ஆசனமும் தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணிக்கு 1 ஆசனமும் கிடைக்கும். இவ்வாறு மொத்தம் நான்கு ஆசனங்கள்போக இன்னும் இரண்டு ஆசனங்கள் மீதியாக உள்ளன. இவ்விரண்டு ஆசனங்களும் கூடிய மிச்ச வாக்குகள் உடைய கட்சிகட்கு வழங்கப்படும். இங்கு மிச்ச வாக்குகளாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு $81,174 - (27964 \times 2) = 25,246$ வாக்குகளும், சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கு $(46,914 - 27,964) = 18,950$ வாக்குகளும், தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணிக்கு 11.734 வாக்குகளும் உள்ளன. எனவே ஐக்கியதேசியக் கட்சிக்கு ஒரு ஆசனமும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு ஆசனமும் இன்னும் மேலதிகமாகக் கிடைத்திருக்கும். எனவே ஒவ்வொரு கட்சியும் பெற்ற ஆசனங்கள் ஐக்கியதேசியக் கட்சிக்கு மூன்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இரண்டும், தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணிக்கு ஒன்றுமாகும். ஐக்கியதேசியக் கட்சியின் பட்டியலில் 1ஆம் இடமும், 4ஆம் இடமும் (மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தலில் வழங்கப்பட்டவாறு) முஸ்லீம்கட்கு வழங்கப்படுமாயின் ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து ஒரு முஸ்லீம்தான் தெரிவு செய்யப்படுவார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் 1ஆம். 3ஆம் இடங்கள் முஸ்லீம்கட்குக் கொடுக்கப்படுமென எதிர்பார்த்தாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மொத்தம் இரண்டு ஆசனங்கள் கிடைத்துள்ளதால் அதில் இருந்தும் 1 முஸ்லீம்தான் தெரிவுசெய்யப்படுவார். எனவே இரண்டு கட்சிகளிலிருந்தும் இரண்டு முஸ்லீம்கள் மட்டுமே பாராளுமன்றத்திற்குப் போகலாம். அதாவது இங்கும் தற்போதுள்ள மூன்று முஸ்லீம் பிரதிநிதித்துவம் இரண்டாகக் குறைக்கப்படுகின்றது. இதேவேளை இரண்டு கட்சிகளிலும் இரண்டாம் இடம் சிங்களவர்கட்குக் கொடுக்கப்படுவதனுல் இரண்டு சிங்களவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அதாவது தற்போதுள்ள சிங்களப் பிரதிநிதித்துவம் ஒன்றிலிருந்து இரண்டாக அதிகரிக்கின்றது. ஒரு முஸ்லீம்களின் மாவட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையினைக் கூட்டும்போது முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் குறைவடைந்து, சிறுபான்மையினரான சிங்களவர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிப்பானது ஒரு விந்தையான பிரதிநிதித்துவ முறையாகவே இருக்கின்றது. உண்மையில் ஆறுபிரதிநிதித்துவம் இம்மாவட்டத்தில் அமைய வேண்டுமாயின் 4 முஸ்லீம்களும், 1 சிங்களவரும், 1 தமிழரும் பிரதிநிதிகளாக அமைய வேண்டும். அண்மைக்காலத்தில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களைக் விலக்கிப்பார்க்கும்போது இக்கணிப்பு மிகமிகச் சரியானதாக அமையும். ஆனுல் 1947ஆம் ஆண்டிற்கு முற்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பார்த்தால் ஒரு சிங்களப் பிரதிநிதிக்குக்கூட இங்கு இடமில்லை. எனவே குடியேற்றத் திட்டம், காணிப்பிரச்சனைகள் போன்றவற்ருல் நாம்

பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் எம்மைப் பெருமளவிற் பாதிக்கின்றது. எவ்வாறெனினும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் பலபிரச்சனைகளைத் தொடர்ந்து எதிர்நோக்கிக் கொண்டே யிருக்கின்றார்கள். எனவேதான் அம்பாறை மாவட்டத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு முஸ்லீமும் கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று இனரீதியாகச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். ஏன்? எமது சந்ததியினரின் நலனுக்காகவாவது.

## அம்பாறை மாவட்டத்தின் முஸ்லீம்களிடமிருந்து பறிப்பதற்கான திட்டமிட்ட சில வழிகள்

அம்பாறை மாவட்டத்தில் வாழ்கின்ற முஸ்லீம்களின் உடைமைகளும், பல்வேறு உரிமைகளும் பல்வேறு வழிகள் மூலமும், பல பிரச்சினைகளை உருவாக்குவதன் மூலமும் பறிக்கப்படுகின்றன. அவற்றுள் சில முக்கியமான வற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன். அவையாவன:

1. பிற சிங்களப் பிரதேசங்களை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்தல்.
2. அம்பாறை மாவட்டத்திலுள்ள முடிக்குரிய காணிகளில் பிற பிரதேசச் சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியேற்றுதல்.
3. முஸ்லீம்களின் காணிகளில் அத்துமீறிக் குடியேறுதல்.
4. முன்னர் முஸ்லீம்களிடமிருந்து சுவீகரித்துப் பின்னர் சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளித்தல்.
5. பொது நோக்கங்கட்காகச் சுவீகரித்தல்.

### பிற பிரதேசங்களை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்தல்:

இப் பிரதேச இணைப்புடன் கூடிய ஒரு செயற்பாடாக அம்பாறை என்ற பெயர் இன்று திகாமடுல்ல என மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒன்று அம்பாறை என்ற பெயர் தமிழ்க் கருத்தைக் கொடுப்பது. அடுத்தது அம்பாறை ஒரு அண்மைக்கால வரலாற்றினைக் கொண்டதாக இருப்பது. அம்பாறை என்பது ஒரு குடியேற்றப் பிரதேசத்தினைக் குறிக்கின்றது. இப் பிரதேசத்திலேயே அதிகமான சிங்களவர்கள் வெளிப் பிரதேசங்களி லிருந்து கொண்டுவரப்பட்டுக் குடியேற்றப்பட்டார்கள். கடந்த சில தசாப் தங்களிலேயே அம்பாறை என்ற ஒரு பெயர் சூட்டப்பட்டு அவ்வாறுன ஒரு இடம் உருவாக்கப்பட்டது. அப் பெயரைக்கொண்டே முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் எமது மாவட்டம் அம்பாறை மாவட்டம் என அழைக்கப்பட்டது. அவ்வாறு குறுகிய வரலாறுகொண்ட ஒரு குடியேற்றப் பிரதேசத்தின் பெயரைக்கொண்டு இம்மாவட்டத்தை அழைப்பது எம்மை நாமே ''தேற்று'' வந்து குடியேறியவர்கள் என்று காட்டிக் கொடுப்பதாக அமைவதை உணர்ந்த இவர்கள் அதனைத் திகாமடுல்ல எனப் பெயரிட்டுள்ளார்கள்.

இவை ஒரு புறமிருக்க, இப்பெயர்மாற்றத்திற்கு மிக முக்கிய மற்றொரு காரணமும் இருக்கின்றது. முன்பு பிற மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டிருந்த சில சிங்களப் பிரதேசங்கள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டமை அம்முக்கிய காரணமாகும். இச் சிங்களப் பிரதேசங்கள் முன்பு மொனருகலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. உதாரணமாக இவ்வாறு இணைக்கப்பட்ட இரண்டு பிரதேசங்கள் மகா ஓயாவும், பதியத்தலாவையும் ஆகும். மகா ஓயாவில் மொத்தம் 13,018 பேரும், பதியத்தலாவையில் மொத்தம் 13,501 பேரும் வாழ்கின்றனர். இதில் வாக்காளர்கள் மொத்தம் முறையே 6,129 பேரும், 6,503 பேரும் காணப்படுகின்றனர். எனவே இவ்விரு கிராமங்களையும் இணைத்தமையால் இம் மாவட்டத்தின் சனத்தொகை 26,519 இனாலும் வாக்காளர் எண்ணிக்கை 12,632 இனாலும் அதிகரித்துள்ளன. இவர்களுள் 99% ஆனவர்கள் சிங்களவர்கள். இவை ஒரே இரவில் வர்த்தமானி மூலம் சிங்களப் பிரதிநிதிகள் பெற்ற வாக்குகள் எனக் கூறலாம். இன்னும் எத்தனை பிரதேசங்கள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்படப் போகின்றன என்பதற்கு எதிர்காலந்தான் பதில் சொல்லும். உண்மையில் இப்பிரதேசங்களை மொனருகலை மாவட்டத்தில் இருந்து பிரித்து அம்பாறை மாவட்டத்துடன் இணைப்பதற்கு நான் சொல்கின்ற காரணங்களைவிட வேறு எந்தக்காரணங்களையும் கூறமுடியாது. ஏன் இவ்வாறு அரசாங்கம் இணைக்கவேண்டுமெனச் சிந்தித்தால் அது வெளிப்படையாக எங்களுக்கு உணர்த்துவது இன வாதத்தைத்தான். சிங்கள இனம் அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மையினராக இருக்க வேண்டும். சிங்களப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவும், தமிழ், முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்படவும் வேண்டும். இதன்மூலம் தமிழ், முஸ்லீம்மக்களின் பொருளாதாரத்தை உடைத்தெறிய வேண்டும். அரசியல் ஆதிக்கத்தைப் பெறவேண்டும். அதாவது புதிய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின்படி அதிக வாக்குகளைப் பெறக்கூடிய செல்வாக்குடையவர்களே பட்டியலில் முதல் இடம்பெற முடியும். அவ்வாறு பார்த்தால் மாவட்ட அபிவிருத்திச் சபைப் பட்டியலிலும் பாராளுமன்றப் பட்டியலிலும் முதலிடம் பெறவேண்டும் என்பது இவர்களின் பிரதான குறிக்கோள். முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக அதாவது 41·5% தினராக இருக்கும் அம்பாறை மாவட்டத்தில் ஒரு சிங்களவர் அரசாங்க அதிபராகவும், ஒரு சிங்களவர் மாவட்ட மந்திரியாகவும் இருப்பது முஸ்லீம்களின் சமூகப் பொருளாதார அரசியல் நிலைமையினை உடைத்தெறிவதற்கான ஆரம்ப முயற்சியாகவே காணப்படுகின்றது. இவ் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள்தான் காணி உடைமையாளர்கள் என்ற நிலையில் போதிய நீர் வசதிகள் இருந்தும் வேண்டுமென்றே நீர்ப்பாசன வசதி நெற்பயிர்ச் செய்கைக்கு மறுக்கப்பட்டமையும், அதற்கு சிங்களப் பிரதிநிதிகள் ஆதரவு கொடுத்தமையும், வேறு காணித் தகராறுகள், காணிப் பங்கீடுகள் முதலியன முஸ்லீம்களுக்குப் பாதகமான முறையில் அமைந்தமையும் எமது வரலாற்றில் மறக்க முடியாத சம்பவங்களாகும்.

## பிற பிரதேசச் சிங்களவர் குடியேற்றம்

இரண்டாவது வகையான இழப்பு சிங்களவர்கள் பிறபிரதேசங்களில் இருந்து வந்து அம்பாறை மாவட்டத்தினுள் குடியேறுவதனால் எமக்கு ஏற்

படுகின்றது. இதுவே முஸ்லீம்கள் தமது தனித்துவத்தையும், உடைமைகளையும், உரிமைகளையும் படிப்படியாக இழந்துகொண்டு வருவதற்குப் பிரதான காரணமாகும். இங்குதான் டீ. எஸ். சேனநாயக்காவின் 1941ஆம் ஆண்டைய எண்ணம் நிறைவேறுகிறது. கல்லோயாத்திட்டம் என்ற போர்வையில் ஆரம்பகாலங்களில் மேற்கொள்ளப்பட்டு இது இன்று அத்துமீறி நடைபெறுகின்றது. 1947ல் சுமார் 3,000 ஆகக் காணப்பட்ட சிங்களவர் எண்ணிக்கை இன்று (1981ல்) 1,46,371 ஆக மிக அபரிமிதமாக அதிகரித்துக் காணப்படுகின்றது. சாதாரண இலங்கையின் சராசரி இயற்கைச் சனத்தொகை அதிகரிப்பு வீதத்துடன் கணக்கிட்டுப் பார்த்தால் இன்றுள்ளதில் 1/10 பங்கு சிங்களவர்கூட அம்பாறை மாவட்டத்தில் இருக்க முடியாது. மீதிப்பேர் வந்தேறுகுடிகளும், பிரதேச இணைப்பால் அதிகரித்த சிங்களவர்களும் ஆவர். சிங்கள வாக்காளரின் எண்ணிக்கை அரசியல் இலாபத்திற்காக எவ்வாறு விபரீதமான முறையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

| ஆண்டு | முஸ்லீம் வாக்காளர் | சிங்கள வாக்காளர் |
|---|---|---|
| 1947 | 37,000 | 2,394 |
| 1952 | 42,000 | 3,119 |
| 1956 | 44,000 | 3,905 |
| 1960 | 52,000 | 23,000 |

இப்புள்ளி விபரங்களில் இருந்து 1956க்கு முன் உள்ள காலத்தினைவிட அதன் பின்னுள்ள காலத்திலேயே அதிக சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகின்றது. 1960–63 காலப்பகுதிக்குமுன் சிங்களத் தொகுதி எதுவும் இப்பிரதேசத்தில் இருக்கவில்லை. இக்காலப்பகுதியின் பிற்பட்ட சில ஆண்டுகளிலேயே சிங்களத்தொகுதி ஒன்றினை உருவாக்கி அதில் பெருமளவு சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியேற்றி உள்ளார்கள். அதாவது இக்காலப் பகுதியிலேயே அம்பாறை மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட்டதுடன் சிங்களத்தொகுதியான அம்பாறைத் தொகுதியும் உருவாக்கப்பட்டது. அதற்குமுன் அம்பாறை மாவட்டம் என்ற பெயரே இருக்கவில்லை. அன்றிருந்த கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியே இன்றைய அம்பாறை மாவட்டமாகும். கிழக்கு மாகாணத் தென்பகுதியில் இரண்டு முஸ்லீம் தொகுதிகள் மட்டுமே இருந்தன. இவை கல்முனைத் தொகுதியும் பொத்துவில் தொகுதியும் ஆகும். இதில் இடையிடையே தமிழ்ச் சகோதரர்கள், முஸ்லீம் மக்களுடன் கலந்து வாழ்ந்தார்கள். இக்காலப்பகுதியின் பின் சிங்களக் குடியேற்றம் எல்லைமீறியதன் விளைவாக வாக்காளர் எண்ணிக்கை சிங்களவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையில் பின்னைய காலத்தில் பின்வருமாறு இருந்தது.

| ஆண்டு | முஸ்லீம் வாக்காளர் | சிங்கள வாக்காளர் |
|---|---|---|
| 1965 | 57,000 | 31,000 |
| 1970 | 62,000 | 39,000 |
| 1977 | 68,000 | 46,000 |
| 1982 | 87,236 | 75,378 |

இத்தரவுகளின்படி 1947ஆம் ஆண்டில் இப்பிரதேசத்தின் தேர்தல் பற்றியோ தனிவேட்பாளர்பற்றியோ நினைத்துக்கூடப் பார்க்கமுடியாதளவு மிகச் சிறுபான்மையினராக இருந்த சிங்களவாக்காளர் எண்ணிக்கை விரைவில் முஸ்லீம்களின் எண்ணிக்கைக்குச் சமனாகக்கூடிய அளவுக்கு மிக உயர்வாக உள்ள நிலையானது இந்நாட்டுப் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரப் போக்கினையும் இந்நாட்டின் சிறுபான்மையினரை இழிவுபடுத்தும் நிலைமையினையுமே எடுத்துக்காட்டுகின்றது. இன்னும் சில சிங்கள வாக்காளர்களைக் கொண்டுவந்து குடியேற்றிவிட்டால் இங்கு சிங்களவர்களும் முஸ்லீம்களும் சரிசமனாகி விடுவார்கள். அதையும் நாம் குறுகிய காலத்தினுள் எதிர்பார்க்கலாம்போல் தோன்றுகிறது.

இம்மாவட்டத்தில் வாழும் முஸ்லீம்களுக்குப் பெருந்தலையிடியைக் கொடுத்துக்கொண்டிருக்கும் குடியேற்றப் பிரச்சனையின் தீவிரத்தை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு வரலாற்று ரீதியாக முஸ்லீம்களினதும், சிங்களவர்களினதும் (வாக்காளர்) அதிகரிப்பினை விகிதாசார ரீதியாகத் தருகின்றேன்.

| கால இடைவெளி | முஸ்லீம் வாக்காளர் அதிகரிப்பு % | சிங்கள வாக்காளர் அதிகரிப்பு% | சிங்களக் குடியேற்ற % |
|---|---|---|---|
| 1947 – 52 | 13 விதம் | 30விதம் | 17விதம் |
| 1952 – 56 | 5 ,, | 25 ,, | 20 ,, |
| 1956 – 60 | 9 ,, | 500 ,, | 491 ,, |
| 1960 – 65 | 9 ,, | 35 ,, | 26 ,, |
| 1965 – 70 | 9 ,, | 26 ,, | 17 ,, |
| 1970 – 77 | 10 ,, | 13 ,, | 3 ,, |
| 1977 – 82 | 28 ,, | 64 ,, | 36 ,, |
| மொத்தம் | 83 ,, | 698 ,, | 610 ,, |

இப்புள்ளிவிபரங்களை நோக்குகின்றபோது முஸ்லீம்களின் சனத்தொகை அதிகரிப்பு விகிதாசாரம் இயற்கை அதிகரிப்பு விகிதாசாரத்துடன் ஒத்துப்போவதையும் சிங்களக்குடிகளின் அதிகரிப்பு விகிதாசாரம் இயற்கை அதிகரிப்பு விகிதத்தினைவிடப் பன்மடங்கு அதிகரித்துச் செல்வதையும் காணலாம். அகில இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பு விதம் சராசரியாக 2% எனக்கொண்டால் (இதனைவிடக் குறைவாகவும் சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. உதாரணமாக 1·7%) 1956 – 60 வரையிலான 5 ஆண்டுக் காலத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கையும், முஸ்லீம்களின் எண்ணிக்கையும் ஒவ்வொன்றும் 10%தால் அதிகரித்திருக்க வேண்டும். (அதாவது ஆண்டுக்கு 2% எனின் 5 ஆண்டுக்கு 10%) ஆனால் முஸ்லீம்களின் சனத்தொகை இக்காலப் பகுதியில் 9%தால் மட்டுமே அதிகரித்துள்ளதை அட்டவணையில் இருந்து அவதானிக்கலாம். இது இயற்கை அதிகரிப்பு விதத்தைவிட வேறு எதுவும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியும். ஆனால் சிங்களக் குடிகளின் அதிகரிப்பு இக்காலப் பகுதியில் 500%தால் அதிகரித்துள்ளதையும் அட்டவணையில் நோக்கலாம். இயற்கை அதிகரிப்புக்கு 10%தினைக் கழிவு செய்தால் மீதி 490% தினரும் குடியேற்றப்பட்ட வாக்காளர்களாவர். இதனையே அட்டவணையின் கடைசிநிரல் காட்டுகின்றது. இதே போலவே ஏனைய காலப்பகுதியினையும் கணிப்பீடு செய்து திட்டமிட்ட குடியேற்றத்

தினைத் தெளிவாக விளக்கியுள்ளேன். இவ்விகிதாசார அதிகரிப்பினைவிடத் தொகை ரீதியான முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான பெரும்பான்மை எவ்வளவு குறைவடைந்து வந்துள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை மூலம் விளக்கலாம்.

| ஆண்டு | முஸ்லிம்கள் (வாக்காளர்) பெரும்பான்மை |
|---|---|
| 1947 | 35,106 |
| 1960 | 29,000 |
| 1965 | 20,600 |
| 1977 | 22,000 |
| 1982 | 11,858 |

சிங்கள வாக்காளர்களைவிட முஸ்லிம் வாக்காளர் பெரும்பான்மை 1947 இல் 35,106 ஆகஇருந்து 1982 இல் 11,858 ஆகக் குறைவடைந்துள்ளது. அதாவது 1947 இல் முஸ்லிம்கட்கும், சிங்களவர்கட்கும் இடையிலான விகிதம் முறையே (37:2) என்ற நிலையில் இருந்து 1982 இல் கிட்டத்தட்ட ஒன்றுக்கு ஒன்று (1:1) என்ற நிலைக்கு வந்துள்ளது. அதாவது 1947இல் 100 முஸ்லிம் கட்கு 5 சிங்களவர் என்ற நிலையில் இருந்து இன்று 100 முஸ்லிம்கட்கு 86 சிங்களவர் என்ற நிலைக்கு வந்துள்ளது. முஸ்லிம்களை ஒவ்வொரு ஆண்டிலும் 100 எனக் கொண்டால் எவ்வாறு சிங்களவர்களின் விகிதம் முஸ்லிம்களின் விகிதத்தோடு போட்டி போட்டுக் கொண்டு அதிகரித்துச் சென்றுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளலாம்.

| ஆண்டு | முஸ்லிம் வாக்காளர் | சிங்கள வாக்காளர் |
|---|---|---|
| 1947 | 100 | 5 |
| 1952 | 100 | 7 |
| 1956 | 100 | 9 |
| 1960 | 100 | 44 |
| 1965 | 100 | 55 |
| 1970 | 100 | 62 |
| 1977 | 100 | 68 |
| 1982 | 100 | 86 |

இத்தரவுகளில் இருந்து 1947 இல் 100 முஸ்லிம்கட்கு 5 ஆக இருந்த சிங்களவர்கள் 1982 இல் 100 முஸ்லிம்கட்கு 86 பேராக மிக அதிகரித்த வேகத்தில் அதிகரித்துச் சென்றதைக் காணலாம். இதே விகிதத்தில் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுக்கொண்டு செல்லுமாயின் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் சிங்களவர்களினதும், முஸ்லிம்களினதும் சனத்தொகை சமஞக அல்லது சிங்களவர் தொகை முஸ்லிம்களின் தொகையினைவிட அதிகமாக இருக்கும். ஏனெனில் 1947 இல் இருந்து 1982 வரை மொத்தச் சிங்கள வாக்காளர் தொகை அதிகரிப்பு 693 வீதமாகும். இதிலிருந்து இயற்கை அதிகரிப்பு வீதம் 83 இனைக் கழித்தால் சிங்களக் குடியேற்ற அதிகரிப்பு 610%. அதாவது 1947 - 1982 வரையிலான 35 ஆண்டு காலத்தில் 610% சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. அவ்வாறாயின் வருடாந்த சராசரிக் குடியேற்ற அதிகரிப்பு 18 வீதம் ஆகும். (அதாவது இயற்கை


அதிகரிப்பு விதம் தவிர) இதனை ஒப்பீட்டு ரீதியாகப் பார்த்தால் இம் மாவட்டத்தில் முஸ்லிம்கட்கும், சிங்களவர்கட்கும் இடையிலான அதிகரிப்பு விதம் (1:10) ஒன்றுக்குப் பத்து என்ற விதத்தில் உள்ளது. அதாவது ஓராண்டில் ஒரு முஸ்லிம்அதிகரிக்க 10 சிங்களவர்கள் அதிகரிக்கப்படுகின்றார்கள். இவ் விகிதாசாரத்தில் சென்றால் இன்னும் 10 வருடங்களில் அதாவது 1992 இல் சிங்கள வாக்காளர்கள் முஸ்லிம் வகாக்காளரைவிட 7000 பேர் அதிகமாகக் காணப்படுவார்கள். அதாவது இன்று சிறுபான்மையினராக இருக்கும் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக மாறிவிடுவார்கள். இலங்கை முழுவதும் மொத்தமாக நோக்கினால் 1971 - 1980 வரை சனத்தொகை 16.1 % தால் மட்டுமே அதிகரித்துள்ளது. ஆனால் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் 22.2 % தால் அதிகரித்துள்ளது. இம் மேலதிக அதிகரிப்பு விதம் வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு சிங்களவர்கள் குடியேறியமையால் ஏற்பட்டவையாகும். இப் பயங்கரத்தின் மொத்தவிளைவு என்னவெனின் 1971 இல் மொத்த அம்பாறை சனத்தொகையில் 50 % மாக இருந்த முஸ்லிம்களாகிய நாம் 1981 இல் 41.6 வீதமாகக் குறைந்துள்ளோம். சிங்களவர்கள் இக்காலப் பகுதியினுள் 30.4 % மாக இருந்து 37 % மாக அதிகரித்துள்ளனர். தமிழ் மக்கள் 22 % மாகவிருந்து 20வீதமாகக் குறைந்துள்ளனர். இந்தப் போக்கில் சென்றால் முஸ்லிம்களை விடச் சிங்களவர்கள் அதிகரிப்பதற்கு இன்னும் மிகச் சில ஆண்டுகளே போதுமானது என்பதை மேலும் விளக்கத் தேவையில்லை. இக் குடியேற்றப் பிரச்சனையின் தீவிரத்தினை இன்னும் தெளிவாக வேறொரு வகையான கணிப்பீட்டின் மூலம் விளங்கிக் கொள்ளலாம். சிங்களவர்கள் ஒவ்வொரு வருடத்திலும் 100 என எடுத்து ஒவ்வொரு வருடத்திலும் 100 சிங்களவர்கள் இருக்கையில் எத்தனை முஸ்லிம்கள் இருந்திருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் எவ்வாறு குறைவடைந்து வந்துள்ளார்கள் என்பதையும் விளக்கலாம்.

| ஆண்டு | சிங்களவர்கள் | முஸ்லிம்கள் |
|---|---|---|
| 1947 | 100 | 1610 |
| 1952 | 100 | 1400 |
| 1956 | 100 | 1100 |
| 1960 | 100 | 226 |
| 1965 | 100 | 184 |
| 1970 | 100 | 160 |
| 1977 | 100 | 148 |
| 1982 | 100 | 115 |

இத் தரவுகளின்படி 1947 இல் 100 சிங்கள வாக்காளர்கள் இருக்குமிடத்து 1610 முஸ்லிம் வாக்காளர்கள் இருந்தனர். ஆனால் இன்று 100 சிங்களவர்கள் இருக்குமிடத்து 115 முஸ்லிம்களே உள்ளனர். இதன்படி நோக்குகையில் அம்பாறை மாவட்டம் ஒரு சிங்கள மாவட்டமாக மாறும் நிலையும், முஸ்லிம்களாலே நாம் ஒரு சிங்கள அபேட்சகருக்கு வாக்களிக்கும் நிலையும் வெகு தூரத்தில் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்தத் தேவையில்லை. இதை ஏன் சொல்கிறேனெனில் 1981 வரையிலான காலப்பகுதியில் இயற்கைச் சராசரி அதிகரிப்பு விதமான 2 உடன் கணக்

கிட்டுப் பார்த்தால் 1981 இல் 101015 சிங்களவர்கள் மட்டுமே இருக்க வேண்டும். ஆனால் 1,46,371 சிங்களவர்கள் இங்கு வாழ்கிறார்கள். 45,356 பேரும் வந்து குடியேறியவர்கள். இதனை அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகைச் செறிவு இன்னும் ஊர்ஜிதப்படுத்தும். இலங்கை பூராவும் 1971 – 80 வரையிலான பத்து ஆண்டுகளின் சனத்தொகைச் செறிவு 16 வீதத்தால் மட்டும் அதிகரிக்க, அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகைச் செறிவு 22 % தால் அதிகரித்துள்ளது. அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகைச் செறிவு இயற்கை அதிகரிப்பு வீதத்தினை மிஞ்சியுள்ளதை இங்கு அவதானிக்கலாம். இதன் முக்கிய காரணம் திட்டமிட்ட குடியேற்றமாகும்.

இப்பிரச்சனையின் தீவிரத்தை (மறு பக்கத்திலுள்ள) வரைபடம் இன்னும் தெளிவாக விளக்குகின்றது. இதில் கடந்தகாலநிலை, தற்காலநிலை, எதிர்காலநிலை என்பன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. S V என்னும் வளைகோடு சிங்கள வாக்காளரினது அதிகரிப்புப் போக்கினையும், M V என்னும் வளைகோடு முஸ்லிம் வாக்காளர்களின் அதிகரிப்புப் போக்கினையும் காட்டுகின்றன. நிலைக்குத்தச்சு வாக்காளரின் எண்ணிக்கையினையும் (ஆயிரத்தில்), கிடையச்சு ஆண்டுகளையும் காட்டுகின்றன. நிலைக்குத்தச்சில் உள்ள வாக்காளரின் எண்ணிக்கையினையும், கிடையச்சில் உள்ள ஆண்டுகளையும் தொடர்புபடுத்தி அப்புள்ளிகளைத் தொடுக்கும்போது S V, M V ஆகிய வளைகோடுகள் பெறப்படுகின்றன. இவ்விரு வளைகோடுகளுக்கும் இடையிலான இடைவெளி 1947 இல் இருந்து குறுகிக்கொண்டே சென்று 1988 ஆம் ஆண்டில் ஒன்றையொன்று சந்திக்கின்றன. அச்சந்திப்பின்போது சிங்களவாக்காளரினதும், முஸ்லிம் வாக்காளரினதும் எண்ணிக்கை ஒவ்வொன்றும் 110,000 ஆக (சமனாக) இருக்கின்றன. இதே அதிகரிப்புப் போக்குத் தொடர்ந்து செல்லுமாக இருந்தால் 1992 ஆம் ஆண்டில் முஸ்லிம் வாக்காளர் எண்ணிக்கை சுமார் 123,000 ஆக இருக்க சிங்கள வாக்காளர் எண்ணிக்கை சுமார் 130,000 ஆக 7000 ஆல் அதிகரித்துக் காணப்படும் என ஊகிக்கலாம். இவ் எதிர்காலப் போக்கினையே தொடுகோடுகள் (– – – – –) காட்டுகின்றன. 1947 ஆம் ஆண்டு மிக அடிமட்டத்தில் இருந்த சிங்கள வாக்காளர் எண்ணிக்கை 1992 ஆம் ஆண்டில் மிக மேல்மட்டத்தை அடையக்கூடிய நிலைமையினையும், மேல்மட்டத்தில் இருந்த முஸ்லிம் வாக்காளர் எண்ணிக்கை கீழ்மட்டத்தை அடையும் நிலைமையினையும் இவ் வரைபடம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இவ்வரைபடத்தினை வரைந்ததன் முக்கிய நோக்கம் இரு சமூகத்தினது சனத்தொகை இடைவெளிகளும் எவ்வளவு விரைவான வேகத்தில் சமனாகின்றன என்பதைத் தெளிவு படுத்துவதே ஆகும். சமனாவது மட்டுமல்ல ஒரு கட்டத்தில் ஒன்றையொன்று மேலனாவியும் செல்கின்றன. 1947 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட முடியாத மிகச் சிறுபான்மை இனமாக இம்மாவட்டத்தில் வாழ்ந்த சிங்களவர்கள் எதிர்காலத்தில் அதுவும் மிகச் சில வருடங்களில் பெரும்பான்மையினராக மாறக்கூடிய நிலைமையானது பொறுத்துக் கொண்டிருக்கக் கூடிய நிலைமை ஒன்றல்ல என்பதுடன், எமது தன்மான உணர்வுக்கும் ஒரு சவாலாகும். இது இந்நாட்டுப் பெரும்பான்மை இனத்தவர் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை மதிக்காத தன்மையினையும் வெளிப்படுத்துகின்றதல்லவா?


1992ம் ஆண்டில் சிங்கள வாக்காளர்கள் 130,000 பேர்
1992ம் ஆண்டளவில் முஸ்லிம் வாக்காளர்கள் 123,000 பேர்
1988ம் ஆண்டில் சிங்கள வாக்காளர்களும் முஸ்லிம் வாக்காளர்களும் சமமாகிறது
(110,000)
SV
MV
வாக்காளர் எண்ணிக்கை (ஆயிரத்தில்)
130
123
120
110
100
90
80
70
60
50
40
30
20
10
முஸ்லிம் வாக்காளர்கட்கும் சிங்கள வாக்காளர்கட்கும் இடையிலான இடைவெளி.
1947
52
57
62
67
72
77
82
87
88
92
ஆண்டு

**அத்துமீறிக் குடியேறல் :**

இம்மாவட்டத்தில் முஸ்லீம்களைச் சிறுபான்மையினர் ஆக்குவதற்கும், அவர்களின் பொருளாதார நிலைமையினைச் சிதறச் செய்வதற்கும் நடைபெறுகின்ற ஒரு மூன்றாவது நடவடிக்கை அத்துமீறிக் குடியேறலாகும். இன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லீம்களின் பிரதேசங்களில் சிங்களவர்கள் தமது புத்தர் சிலைகளைக் கொண்டுவந்து வைப்பதும், சில இடங்களில் சமய ஆதாரச் சின்னங்களைத் தாமே கொண்டு சென்று புதைத்துவிட்டுச் சில காலம் சென்றபின் அப்பிரதேசம் தமக்குரியதென வாதாடுவதும், சிங்களவர்களும், சிறுபான்மையினரும் ஒன்றித்து வாழ்கின்ற குடியேற்றப் பிரதேசங்களில் கலகங்களை ஏற்படுத்திச் சிறுபான்மையினரை அனாதையாக்கி அவ்விடங்களை ஆக்கிரமித்துக் கொள்வதும், முஸ்லீம்களிடமிருந்து அரசாங்கம் சுவீகரித்துப் பொதுநோக்கங்களுக்காகப் பயன்படுத்திய பின் அரசினால் கைவிடப்பட்ட முஸ்லீம்களின் காணிகளின்மீது சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறுவதும் இன்று பெருமளவில் அதிகரித்து வருவதையும், இதற்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், அரசியற் பிரமுகர்களும் ஒத்துழைப்பு வழங்குவதும் அரசாங்கம் இது பற்றிய நடவடிக்கைகளில் மறைமுகமாக ஆதரவளிப்பதுமான நிலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இதற்கான சில உதாரணங்களைத் தரலாம் என நினைக்கிறேன்.

சில மாதங்களுக்கு முன் இம்மாவட்டத்தைச் சேர்ந்த மல்வத்தை தொட்டாச்சுருங்கிவட்டைக் கண்டத்திலுள்ள தமிழ்பேசும் விவசாயிகளின் நெற்காணிக்குள் அவர்களின் ஆட்சியில் குறுக்கிட்டு விவசாயிகளைத் தடுத்து, அவர்களுக்குத் தொல்லை கொடுத்துவரும் புத்தங்கள விகாரைக்குப் பொறுப்பான தேரோ உட்படப் புத்தங்கள சமித்திய உறுப்பினர்கள் ஏழுபேருக்கு எதிராகக் கல்முனை நீதிபதி தடையுத்தரவு பிறப்பித்திருந்தது சிலருக்கு ஞாபகம் இருக்கலாம். கல்லோயாத்திட்டம் வந்தபோது வியர்வை சிந்திக், காடுவெட்டி வயல் நிலமாக்கப்பட்டதே இத்தொட்டாச்சுருங்கி வட்டை. இது நில அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டது. இதன் பரப்பு சுமார் 500 ஏக்கர். 194 கண்டங்களில் 3 ஏக்கர் வீதம் தமிழ் பேசும் மக்கள் நீண்டகாலமாக இப்பகுதியில் விவசாயம் செய்து வருகின்றனர். இப்பொழுது இதற்கு மேற்படி தேரோவும், சமித்திய உறுப்பினர்களும் உரிமை பாராட்டுகின்றார்கள். தேரோபோன்ற மதிப்புவாய்ந்த மதகுருக்களே இவ்விழிசெயல்களில் ஈடுபடும்போது ஏனைய சிங்களவர்களின் நடவடிக்கைகளை நாம் ஓரளவு ஊகித்துக் கொள்ளமுடியும் அல்லவா? தொடர்ந்து நடந்துவரும் இவ்வநீதிக்கு எதிராகக் கல்முனை நீதிமன்றத்தில் கடந்த செப்ரெம்பர் 30ல் (1981) ஐந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இவ்வழக்கின் ஆதாரங்களை பரிசிலனை செய்த நீதிபதி தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை உணர்ந்து தேரோவும், அவர் கூட்டத்தினரும் இதில் ஆட்சி செய்யக்கூடாது எனத் தடையுத்தரவு பிறப்பித்திருந்தார். அண்மையில் திருக்கோயில் எனும் தமிழ்க்கிராமத்தில் கோயில் ஓடுகளை அகற்றியமையும், புத்தர்சிலை கொண்டுவரப்பட்டு வைக்கப்பட்டமையும், அதற்கு இராணுவத்தினர் உடந்தையாக இருந்தமையும் இன்னொரு உதாரணமாகும்.

இவ்வாறு அத்துமீறிக் குடியேறமுன்னர் முஸ்லீம் தமிழ், மக்களுக்குச் சில அநீதிகளையும் இடையூறுகளையும் விளைவிக்கிறார்கள். இவற்றைத் தாங்கிக்கொள்ள முடியாத முஸ்லீம், தமிழ் மக்கள் தமது காணி, நிலம், வீடு, வளவுகளை விட்டு வெளியேறுகின்றனர். பின்னர் இவ்விடங்களில் சிங்களவர்கள் குடியேறிக்கொள்கின்றனர். வயல் நிலங்களை ஆட்சி செய்கின்றனர். உதாரணமாகப் பெரியவிகாரைக்கண்டம் எனும் இடத்தில் முஸ்லீம்களுக்குச் சொந்தமான சுமார் 200 ஏக்கர் நிலம் இருக்கின்றது. இவ்வயற்பரப்பின் ஒரு பகுதியால் நீர்ப்பாசன அணைக்கட்டுச் செல்கின்றது. இதன் இரு மூலைகளிலும் ஒன்றில் பாய்ச்சல் வாய்க்காலும் மற்றதில் வடிச்சல் வாய்க்காலும் உள்ளன. அதாவது ஒரு வாய்க்காலினால் தேவையான போது தண்ணீரை வயலுக்குப் பாய்ச்சுவது. மற்றதால் தேவையற்றபோது நீரை வெளியே எடுத்துவிடுவது. அண்மையில் இம் முஸ்லீம்களை இக்காணிகளில் இருந்து விரட்டவேண்டும் என்பதற்காக அல்லது இக்காணிகளில் முஸ்லீம்கள் பயிர்செய்வதைத் தடைசெய்ய வேண்டும் என்பதற்காக அரசாங்கமே ஒரு நடவடிக்கை எடுத்தது. அதாவது வயலினுள் இருந்து நீர்வடியும் வடிச்சல் வாய்க்காலை நீரை வடிய முடியாதவாறு நன்கு இறுகக் கட்டும்படியும், வயலினுள் நீரைப் பாய்ச்சுகின்ற பாய்ச்சல் வாய்க்காலை மேலும் திறந்துவிடும்படியும் அரசாங்க அதிகாரிகளால் கட்டளை இடப்பட்டுள்ளது. இதன் விளைவு என்னவெனில் அவ்வயல் நிலம் ஒரு குளமாக மாறும். இதனால் இவ் 200 ஏக்கரிலும் இனிமேல் வேளாண்மை செய்ய முடியாத ஒருநிலை ஏற்படும். இதனால் இதன் உடைமையாளருக்கு பெருத்த சேதமும் ஏற்பட்டுள்ளது. இது முஸ்லீம் சமூகத்திற்கு ஏற்பட்ட ஒரு நட்டமாகும். இவ்வாறுதான் முஸ்லீம், தமிழ்மக்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டு அவர்கள் தங்கள் நிலங்களை விட்டு வெளியேறும் அளவுக்குத் துன்புறுத்தி அவர்களின் நிலங்களை ஆட்கொள்கின்றார்கள். இத்துன்புறுத்தலைத் தனியார் மட்டுமல்ல அரசாங்க அதிகாரிகளும் அரசியல் பிரமுகர்களும் சுய நலனுக்காவும், துவேசமனப்பான்மையுடனும் செய்து வருகின்றார்கள் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தற்போது சில முக்கியஸ்தர்களின் தலையீட்டினால் இதனைக் குளமாக்கும் செயற்பாடு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### முஸ்லீம்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளைச் சிங்களவர்கட்குப் பகிர்ந்தளித்தல்:

இன்னொருவகையான சிங்களக் குடியேற்றம் என்னவெனில் முதலில் முஸ்லீம்களிடம் இருந்து அரசாங்கத் தேவைக்கென அல்லது புனித பிரதேசத்துக்கென அல்லது வேறு பொதுநோக்கத்திற்கெனத் தமிழ், முஸ்லீம் மக்களிடம் இருந்து காணிகளை முதலில் சுவீகரித்த பின்னர் சிலகாலம் சென்றபின் அவற்றை மக்களிடையே திருப்பிக் கொடுக்கப் போவதாகக் கூறிச் சுவீகரிக்க முன்னர் அவற்றின் உடைமையாளராக இருந்தமுஸ்லீம், தமிழ் மக்களுக்குக் கொடுக்காமல் புதியவேறு சிங்களவர்கட்குக் கொடுத்துச் சிங்களவர்களைக் காணி உடைமையாளர்களாகவும், பொருளாதார வலுவுள்ளவர்களாகவும் மாற்றுதல். உதாரணமாக 1965ஆம் ஆண்டு 1000 ஏக்கர் நிலம் நரைச்சோலைக் கண்டத்தில் முஸ்லீம்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது இதில் கரும்புச்செய்கை கைவிடப்பட்டு 55 சிங்களக்

குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இதேவேளை அம்பலம் ஓயா, நீத்தே, எக்கலோறு ஆகிய பிரதேசங்களில் சிங்களவர் குடியேற இடம் இருந்தும் முஸ்லீம்களின் காணியில் கொண்டுவந்து குடியேற்றி இருக்கிறார்கள். உண்மையில் பழைய உடைமையாளர்களான முஸ்லீம்களையே மீண்டும் இதில் குடியேற்றியிருக்க வேண்டும்.

இவ்வகையான அத்துமீறலும் அநியாயங்களும், நெற்காணிகளில் மட்டு மன்று, மீன்பிடித்தொழிலும் நடைபெறுகின்றன. சேனநாயக்கா சமுத்திரத் திலும், ஏனைய குளங்களிலும் நன்னீர் மீன்பிடித்தொழில் செய்த முஸ்லீம்கள் சிங்களவர்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இன்று அவை சிங்களமயமாக் கப்பட்டுள்ளன. இறுகம்பை, உல்லே, எலவை போன்ற இடங்களில் உள் ளூர் மீனவர்களுக்கென அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட மீனவர் குடி யேற்றத்திற்கான வீடுகள்கூட காலி, மாத்தறை போன்ற இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்களவர்கட்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

## பொது நோக்கங்களுக்காகச் சுவீகரித்தல் :

பொது நோக்கங்களுக்காக முஸ்லீம்களின் காணிகளைச் சுவீகரித்தல் மற்றொரு வகையான குடியேற்றமாகும். எவ்வளவோ சிங்களவர்களின் காணிகள் இருந்தும் இவற்றைப் பொதுநோக்கங்கட்காக அல்லது புனித பிரதேசங்கட்காகப் பயன்படுத்தாமல் முஸ்லீம்களின் காணிகளையே அதிகம் சுவீகரிக்கின்றார்கள். இதற்குச் சிறந்த உதாரணம் தீகவாபிப் பிரதேசமாகும்.

## தீகவாபி :

இப்பிரதேசத்தில் முஸ்லீம் மக்கள் பன்னூறு காலமாக விவசாயத்தில் ஈடுபட்டுவருகின்றனர். சுமார் நாற்பது வருடங்கட்குமுன் காடுகளைவெட்டி, வேர்பிடுங்கிக் கஷ்டப்பட்டுக் காணிகளாக்கப்பட்டது இப்பிரதேசமாகும். காலம் சென்ற அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் கல்முனைப் பகு தியில் உதவி அரசாங்க அதிபராகப் பணிபுரிகின்ற காலத்தில் இப்பகுதியில் விவசாயம் செய்த மக்களுக்குத் தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங் கப்பட்டன. அதன் பின்னர் கல்லோயா அபிவிருத்திச் சபையினாலும், அதன் பின்னர் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையினாலும், அதன் பின்னர் மாவட்ட அரசாங்க அதிபரினாலும் அனுமதிப் பத்திரங்கள் வழங் கப்பட்டுமுள்ளன. இதைத்தவிர பெரிய விகாரக் கண்டத்தில் (முன்பு குறிப்பிட்டது) உள்ள முஸ்லீம்களுடைய விவசாயக் காணிகட்கு 1819 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்உடைய ஆட்சிக்காலத்தில் (கிறவுண்ட, கிறுண்ட்) உறுதிகளும் வழங்கப்பட்டன. இவ்வாறு உறுதிகளும் எல். ஓ. டி. அனு மதிப்பத்திரங்களும் உள்ள முஸ்லீம்களின் பூர்வீகச் சொத்தான இப்பிரதேச 997 ஏக்கரைத் தற்போது அரசாங்கம் சுவீகரித்துள்ளது.

தீகவாபி புனிதநகர அபிவிருத்தித் திட்டம் என்ற பேரிலேயே முஸ்லீம் களின் பூர்வீகச் சொத்தான இக்காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. இதனை ஏன் புனித நகராக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்கு இவர்கள் கூறுகின்ற காரணங்கள் போலியானவையாகவும், ஆதாரமற்றவையாகவும்

உள்ளன. உதாரணம் தத்தாகதி மகாசம்புத்த பிரான் தீகவாபிக்கு விஜயம் செய்து 500 பிக்குகளுடன் தியானத்தில் அமர்ந்துள்ளார். ஆதலால் இதனைப் புனித பிரதேசமாக அபிவிருத்தி செய்வதாகக் கூறப்படுகிறது. இது போல இன்னும்பல காரணங்கள் கூறப்படுகின்றன. சமயப் பெரியார்கள் விஜயம் செய்தமைக்காகவும், தியானத்தில் அமர்ந்தமைக்காகவும் இப்பிரதேசத்தைப் புனித நகராக அபிவிருத்தி செய்வதாயின் முஸ்லீம் பெரியார்கள் தரிசனம் செய்த எத்தனையோ இடங்கள் இலங்கை முழுவதும் இருக்கின்றன. அவற்றை எல்லாம் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி இவற்றிலெல்லாம் முஸ்லீம்கள் வாழ அனுமதிப்பார்களா?

அண்மையில் தீகவாபி பிரதி சங்கஸ்கரன சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இக் கூட்டுத்தாபனம் பல குறிக்கோள்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று திகவாபி சைத்தியத்தைச் சுற்றியமைந்துள்ள மாவட்டங்களில் காணப்படும் தொல்பொருள் மீதங்களையும், பொருட்களையும் பேணிக்காப்பதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் என்பதாகும். இவ்வாறுயின் இன்னும் இம்மாவட்டத்தில் எஞ்சியுள்ள சில முஸ்லீம், தமிழ்ப் பிரதேசங்களிலும் தொல்பொருள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு எந்த புத்தசமயப் பெரியாராவது இப்பகுதிகளில் தரிசனம் தந்துள்ளாரா? தியானத்தில் இருந்துள்ளாரா? எனக் கண்டுபிடித்து இவற்றையும் தீகவாபிபோல் புனித நகரமாக்கும் நிலை ஒன்று ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. முஸ்லீம், தமிழ் மக்களின் ஏனைய பிரதேசங்களும் பறிபோகலாம் என்பதை மேலும் உறுதிப்படுத்துவதற்காக 1979–03–09 ஆம் திகதி ''இன்டிப்பென்டென்ட்'' பத்திரிகைச் செய்தி அமைந்துள்ளது. இதில் 1000 ஏக்கர் நிலம் புனித நகர அபிவிருத்தி நோக்கத்துக்காகவும், 500 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன நோக்கத்திற்காகவும் கல்முனைப் பிரதேசத்தில் சுவீகரிப்பதற்கான ஒரு பேச்சுவார்த்தை இருப்பதாகக் கூறப்பட்டிருந்தது. அவ்வாறுயின் கல்முனைப் பிரதேசமும் பறிபோகுமா?

தீகவாபியினைப் புனித நகரமாக அபிவிருத்தி செய்வதிலும், தீகவாபி பிரதி சங்கஸ்கரண சபையை அபிவிருத்தி செய்வதிலும், தீகவாபி சைத்தியத்தைக் கட்டி யெழுப்புவதிலும் காட்டுகின்ற அக்கறையும், ஊக்கமும் இப்பகுதியில் காணி இழந்த மக்களுக்குக் காணி பெற்றுக் கொடுப்பதில் காட்டப்படவில்லை. இப்பகுதிகளில் காணியிழந்த மக்களுக்கு மீண்டும் காணிகள் கொடுக்கப்படுவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. பின்னர் இப்பிரச்சனையை நேரில் கண்டறிவதற்காக எம். எச். முஹம்மது, ஈ. எல். சேனநாயக்கா ஆகியோரை ஜனாதிபதி இங்கு அனுப்பி வைத்தார். இவ்வேளை நடைபெற்ற கலந்துரையாடல்களில் இப்பகுதி எம். பி. களும், பிரமுகர்களும் கூடக் கலந்துகொண்டனர். இதன் பின்னர் பத்திரிகைகளில் பெரிய தலைப்புகளில் தீகவாபிப் பிரச்சனையை ஜனாதிபதி சுமுகமாகத் தீர்த்துவிட்டதாகவும், காணியிழந்த முஸ்லீம்களுக்குப் பதிற்காணி வழங்கப்பட்டதாகவும் செய்திகள் வந்தன. ஆனால் கடந்த மாதம் இன்னொரு செய்தி வந்தது. தீகவாபிப் பிரச்சனை தொடர்பாகத் தீர்வு காண்பதற்கு 24–03–1982 இல் ஜனாதிபதி தனது அலுவலகத்தில் மாநாடொன்றைக் கூட்டுவதாக இம் மாநாட்டில் சபாநாயகர் அல்ஹாஜ்பாக்கிர் மாக்கார், ஜனாப் ஏ. ஸி. எஸ்

ஹமீது, அல்ஹாஜ் எம். எச். முஹம்மது, திரு. ஈ. எல். சேனநாயக்கா, திரு. காமினி திசாநாயக்கா, ஜனுப் எம். ஏ. அப்துல் மஜீத், ஜனுப் ஏ. ஆர். மன்சூர் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். ஏற்கனவே ஈ. எல். சேனநாயக்கா, எம். எச். முஹம்மது ஆகியோர் தீகவாபி பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து ஒரு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்கள். ஆனுல் இம்மாநாட்டில் இன்னெரு அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு ஈ. எல். சேனநாயக்கா பணிக்கப்பட்டார். இம்மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. இன்னும் இப்பிரச்சனை தீர்க்கப்படாமலே இருந்து வருகின்றது. பத்திரிகைகளிலும் முன்னுக் குப் பின் முரணுன செய்திகள் வருவதும், (அதாவது முதலில் ஒருமுறை தீகவாபிப் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டதாகவும், பின்னர் சில காலத் தின்பின் தீகவாபி பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும் எனவும்) இதற் கென ஒரு மாநாடு, குழுக்கள் ஆகியன நியமிக்கப்படுவதும், அவை செயற்படாமையும் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதுடன் இது ஒரு ஏமாற்றுவித்தை எனவும் மக்கள் நம்புகின்றனர்.

தீகவாபியில் காணி இழந்த மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப் பட்டாற்கூட அது ஒரு நிரந்தரமான சரியான தீர்வாக அமையப் போவதில்லை. இப்பொழுது தீகவாபியில் சுவிகரிக்கப்பட்ட காணிகள் அதிக வளமுள்ள, அதிக விளைச்சலைத் தரக்கூடிய, அதிக விலையுடைய காணிகளாகும். கூடிய விளைச்சலையும், கூடிய பெறுமதியையும் உடைய காணிகளைப் பறித்து விட்டுக், குறைந்த விளைச்சலையும், குறைந்த பெறுமதியையும் உடைய திருத்தப்படாத தரிசு நிலங்களைப் பதிலாக வழங்கினுல் அது இப்பகுதி முஸ்லீம்களின் பொருளாதார நிலையை தகர்த்தெறிவதாக அமையும். எனவே பதிற்காணிகளை வழங்கும்போது பெறுமதியிலும், விளைவிலும் வேறுபடாத போக்குவரத்து வசதியுள்ள பகுதிக் காணிகளாக இவர்கட்கு வழங்கப்படல் வேண்டும்.

இன்று நாம் இன்றைய தீகவாபியைப்பற்றி மட்டுமே பேசுகின்ருேம். அது மட்டும்தான் இப்பகுதி முஸ்லீம்கள் இழந்த பிரதேசமன்று. அது மட்டும்தான் எமது இன்றைய பிரச்சனை என்பதும் அன்று. அம்பாறை மாவட்டத்தில் இன்னும் எத்தனையோ காணிப்பிரச்சனைகள் தீர்வு காணப் படாமல் இருக்கின்றன. நாம் இதுவரை இழந்த காணிகளுடன் ஒப்பிடும் போது தீகவாபியில் இன்று இழந்துள்ள காணி ஒரு சிறுபகுதிமட்டுமே. நாம் முன்பு இழந்தவற்றை மறந்துவிட்டு இதை மட்டும் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. உதாரணமாக 1968 இல் ரணதுங்க கமிட்டியின் தீர்மானப்படி தீகவாபியில் ஏற்கனவே 585 ஏக்கர் காணி சுவிகரிக்கப்பட்டது. இதனை அப்போது முஸ்லீம்கள் எதிர்த்தபோது இனிமேல் இப்பகுதியில் அதாவது தீகவாபியில் காணிகளைச் சுவீகரிக்கப்பதில்லை என அப்போது முஸ்லீம்களிடம் வாக்குறுதி அளிக்கப்பட்டது. இன்று அதே தீகவாபியிலே காணிகளை மீண்டும் சுவீகரித்துவிட்டு (பழையவாக்குறுதியை மறந்து) இப்பகுதியில் இனிமேல் எக்காணிகளும் சுவீகரிப்பதில்லை என வாக்குறுதி அளித்துள்ளனர். இன்னும் 10 வருடங்களின் பின் 1968 ஆம் ஆண்டைய வாக்குறுதிபோல் இது அமையுமென்பது நிச்சயம்.

*புராதன பூர்விகச் சொத்துக்களான முஸ்லீம்களின் காணிகள் 1952ஆம் ஆண்டில் இருந்து சுவீகரிக்கப்படுகின்றன. இதுவரை மொத்தமாக 10,250 ஏக்கர் புராதன முஸ்லீம்களின் காணிகள் அம்பாறை மாவட்டத்தில் சுவீகரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே தீகவாபியுடன் இவ்வெல்லாக் காணிகளையும் பற்றி நாம் இன்று பேசவேண்டும். இக்காணிகள் அனைத்தும் தற்பொழுது சிங்கள அத்துமீறற் குடியேற்றக்காரரிடமும், அரசாங்கக் கரும்புச் செய்கையின் கீழும், தரிசாக விடப்பட்டும் இருக்கின்றன. அரசாங்கம் விரும்பினால் தரிசாகக் கிடைக்கும் காணிகளையும், அத்துமீறிக் குடியேறிய காணிகளையுமாவது உரிய முஸ்லீம்களிடம் திருப்பிக் கொடுக்கலாம் அல்லவா?*

*இவ்வாறு இழந்து—இழந்து சென்று முஸ்லீம்களின் சொந்த மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் 2/3பங்கினை இழந்து விட்டனர். அம்பாறை மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 1752.4 சதுரமைல்களாகும். இவற்றுள் 1005.9 சதுரமைல்கள் தனிச் சிங்களப் பிரதேசமாகிவிட்டன. மீதி 746.5 ச. மைல்கள் மட்டுமே இன்றைய நிலையில் எமக்குச் சொந்தமாக உள்ளன. அதாவது 1/3பங்கு. இந்த 1/3 பங்கிலும்கூடச் சிங்களவர்கள் வாழ்கின்றார்கள். இம்மூன்றிலொரு பகுதியைக்கூட ஆட்கொள்ள இன்று சதி நடைபெறுகிறது. 1947ஆம் ஆண்டில் சுமார் 2394 வாக்காளர்களாகவிருந்த சிங்களவர்கள் 2/3 பங்கினை ஆட்கொண்டு விட்டார்கள் எனின் இது எமது பலவீனமா? அல்லது அவர்களது காட்டுமிராண்டித்தனமா?*

## தமிழ் முஸ்லீம் பிரதேசங்களில் ஊடுருவல்:

இவற்றினைவிட இன்று தனிமுஸ்லீம், தமிழ்க்கிராமங்களாக இருந்த சிறுசிறு கிராமங்களிலும் சிங்களவர்கள் குடியேறி வருகின்றார்கள். உதாரணமாக பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், கரைவாகப்பற்று, சம்மாந்துறைப்பற்று என்பன தனிமுஸ்லீம் மக்களுடைய கிராமங்களாகும். திருக்கோயில் தமிழ்மக்களுக்குரிய கிராமமாகும். இப்பிரதேசங்களில் தரிசாகக் கிடக்கின்ற அரசாங்கக் காணிகளில் முதலில் சமய ஆதாரங்களை ஏற்படுத்தி – உதாரணமாக முன்பு கூறியபடி புத்தர் சிலையை வைத்து, அதைச்சுற்றி அரச மரத்தை நாட்டிப், பின்னர் அதைச் சுற்றிக் குடியேற முயல்கிறார்கள். சமயத்தை முன்வைத்து இவர்கள் குடியேற முயல்வதால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் மாவட்ட அமைச்சரும், அரசாங்க அதிபரும் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அரசாங்கமும் வாழாவிருக்கின்றது. மேலும் அரசாங்கம் தமிழ், முஸ்லீம், பகுதிகளில் உள்ள காணிகளைப் பகிர்ந்தளிக்கும்போதும் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடுகளை வழங்கும்போதும் வியாபார நிலையங்களை வழங்கும்போதும் சிங்களவர்களுக்கு கணிசமான பங்கினை வழங்குகின்றதுமட்டுமன்றி முன்னுரிமையையும் அளிக்கிறது. உதாரணமாக அண்மையில் கல்முனையில் அமைக்கப்பட்ட நவீன மாடிச்சந்தையில் கணிசமான பங்கு சிங்களவர்கட்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கல்முனை முற்றிலும் தமிழ், முஸ்லீம் மக்களுக்குச் சொந்தமான பிரதேசமாகும். ஆனால் சிங்களப் பகுதிகளில் இவ்வாறு பகிர்ந்தளிப்புக்கள் நடைபெறும்போது முஸ்லீம், தமிழ்மக்களுக்கு பங்களிப்புச் செய்யப்படுவதில்லை. மற்றும் தமிழ், முஸ்லீம் பகுதிகளில் காணி

களையும், வீடுகள், கட்டிடங்கள், வியாபார நிறுவனங்கள் என்பனவற்றையும் கொள்வனவு செய்வதில் இப்பகுதிச் சிங்களவர்களும் வெளிப்பிரதேசச் சிங்களவர்களும் அதிக அக்கறை காட்டி வருவதுடன் நிரந்தர குடிகளாகவும் மாறுகின்றனர். ஒரு வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தமிழர் அல்லது முஸ்லீம் இங்குவந்து நிரந்தரக் குடிகளாவதற்கான நிலையினைவிட ஒரு வெளி மாவட்டச் சிங்களவர் இங்கு வந்து குடிகளாக நிரந்தரமாக வாழ்வதற்கான நிலை மிக இலகுவானதாக இருப்பதும் இதற்குக் காரணமாகும். அதாவது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகள், ஆகியோர் இதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். பின்வரும் புள்ளிவிபரங்கள் எவ்வளவுதூரம் தமிழ், முஸ்லீம் பகுதிகளில் சிங்களவர்கள் ஊடுருவியுள்ளனர் என்பதினை விளக்கும்.

| தனித்தமிழ் முஸ்லிம் கிராமங்கள் | சிங்களமக்கள் (தற்பொழுது வாழ்கின்றவர்கள்) |
|---|---|
| பொத்துவில் | 1171 |
| அட்டாளைச்சேனை | 1847 |
| சம்மாந்துறைப்பற்று | 1755 |
| அக்கரைப்பற்று | 697 |
| கரைவாகுப்பற்று | 137 |
| திருக்கோயில் | 161 |
| நிந்தவூர் | 103 |

இவர்களது மொத்த எண்ணிக்கை 5871. இவர்கள் மேலும் அதிகரிக்க இடம்கொடுக்காமல் இருப்பதும் இவர்களது குடியிருப்பு உரிமைகள் பற்றி ஆராய்வதும் எமது இன்றைய கடமையாகின்றது.

## கல்முனையை ஒரு தனிமாவட்டமாக்கல் :

கல்முனைப் பகுதியை ஒரு தனிமாவட்டமாக்கக் கோரும் கோரிக்கை அண்மைக் காலங்களில் சில முஸ்லீம் அரசியல் சமூக சேவை இயக்கங்களால் விடப்படுகின்றது. இதுபற்றிக் கருத்தரங்குகளிலும் கூட்டங்களிலும் பேசப்படுகின்றது. முஸ்லீம்களின் பொதுவானதொரு உரிமைக்காகப் போராடும், இவர்களை, இக் கோரிக்கை சுயநலம் உடையவர்களாகக் காட்டும் என்பதை என்னால் இங்கு கூற முடியும். கல்முனைப்பிரதேசத்தை தனிமாவட்டம் ஆக்கினால் இதனுள் சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை ஆகிய மூன்று முஸ்லீம் தொகுதிகளும் உள்ளடக்கப்படும். ஆனால் இம் மூன்று தொகுதிகளையும் விட அம்பாறை மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் முஸ்லீம்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் ஆங்காங்கே சிதறி வாழ்கின்றார்கள். எம்து சொந்த அரசியல் நோக்கத்திற்காக இவ்வாறு சிதறி வாழும் முஸ்லீம்களை நாம் புறக்கணிக்கக் கூடாது. தனிச் சிங்களக் கிராமங்களான பதியத்தலாவையிலும் மகாஓயாவிலும் கூட முஸ்லீம்கள் மிகச் சிலர் வாழ்கின்றார்கள். 35 முஸ்லீம்கள் மகாஓயவிலும் 76 முஸ்லீம்கள் பதியத்தலாவையிலும் வாழ்கின்றார்கள். அரசியல் ரீதியாகமட்டும் சிந்திக்காது, சமூக ரீதியாகவும், மனிதாபிமான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கூடச் சிந்திக்க வேண்டும். பொருளாதார ரீதியாகப் பார்க்கையில் கல்முனைப் பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லீம்கள் பலரின் வயல் நிலங்களில் கணிசமான பங்கு கல்முனைப் பகுதிக்கு அப்பாலே உள்ளது. இவை இப்பகுதி மக்களின்

ஜீவனோபாயத்திற்குள்ள ஒரு பெரும் செல்வமாகக் கருதப்படுகின்றது. அக்காணி நிலங்களை முற்றிலும் நம்பியே அநேகமான மக்கள் இங்கு வாழ்கின்றார்கள். எனவே கல்முனைப்பகுதியைத் தனி மாவட்டமாக்கும் கோரிக்கை எமது பொருளாதாரத்திற்குச் சாவுமணியாக அமையலாம். மற்றும் எமது சில வர்த்தகர்கள் அம்பாறை போன்ற இடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்து ஜீவனோபாயம் நடாத்துவதையும் நாம் மறந்துவிடக் கூடாது. எனவே மேற்கூறிய இரண்டு முக்கிய காரணங்களுக்காக மட்டுமாவது நாம் கல்முனைப் பிரதேசத்தைத் தனிமாவட்டமாகக் கோருவது முற்றிலும் பொருத்தமற்றது.

எனவே எமது பிரச்சனைகளுக்குத் தனிமாவட்டம் தீர்வு அன்று. நாம் இழந்த உரிமைகளையும், வாய்ப்புக்களையும் மீண்டும் பெற்றுக்கொள்வதே இதற்குத் தீர்வாக அமையும். இதற்குப் பின்வரும் கோரிக்கைகளை நாம் முன் வைக்கலாம்.

(1) அரசியல் இலாபங்கருதி அதாவது அதிக அங்கத்துவத்தினைப் பெறுவதற்காக அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள மகாஓயா, பதியத்தலாவை போன்ற பிற மாவட்டத்திற்குரிய சிங்களக் கிராமங்களை மீண்டும் முன்பிருந்த மாவட்டத்துடன் இணைக்கக் கோருதல், எதிர்காலத்தில் எப்பிரதேசங்களையும் அம்பாறை மாவட்டத்துடன் இணைப்பதில்லை என்ற வாக்குறுதியினை அரசாங்கம் முஸ்லீம் மக்களுக்கு அளிக்கக் கோருதல்.

(2) அரசாங்கம் தமிழ், முஸ்லீம் பகுதிகளில் காணிகளை அல்லது வீடுகளை அல்லது வியாபாரத்தலங்களைப் பகிர்ந்தளிக்கும்போது தமிழ், முஸ்லீம் மக்களுக்கே முன்னுரிமை அளிக்கக் கோருதல், இவற்றை இப்பிரதேசத்தில் இல்லாத சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதை முற்றாக நிறுத்தக் கோருதல்

(3) தமிழ் முஸ்லீம் மக்களின் காணிகளிலும் பிரதேசங்களிலும் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்களக் குடிகளை மனிதாபிமானத்தின் அடிப்படையிலாவது வெளியேற்றக் கோருதல்.

(4) அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகட்குப் பதிலாக அதேபெறுமதியும் அதே விளைவைத் தரக்கூடியதும், அதே போக்குவரத்து நீர்ப்பாசன வசதிகளை உடையதுமான காணிகளைப் பகிர்ந்தளிக்கக் கோருதல். இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் காணிகள் ஒரு காலத்தில் வேறு முஸ்லீம்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்டதாக இருக்கக் கூடாது.

(5) 1952ஆம் ஆண்டு முதல் முஸ்லீம்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகள் அரசாங்கத்தால் இப்பொழுது தரிசாக விடப்பட்டிருந்தால் அல்லது அரசாங்கத்தால் தரிசாக விடப்பட்டு அதில் இப்பொழுது சிங்களக் குடிகள் அத்துமீறிக் குடியேறியிருந்தால் அல்லது அவற்றை அரசாங்கமே சிங்களவர்கட்கு பகிர்ந்தளித்திருந்தால் அவற்றின் உரிமைகளை ஆராய்ந்து புராதன முஸ்லீம் உரிமையாளருக்கே அவற்றினை உரிமையாக்கக் கோருதல்.

(6) பிறமாவட்டங்களில் இருந்து சிங்களவர்களை இங்குகொண்டுவந்து குடியேற்றியதுபோல, வீடுகளும் காணிகளும் வழங்கப்பட்டதுபோல வெளிமாவட்டங்களில் வீடு, காணி, தொழில் எதுவும் இன்றி வாழ் கின்ற முஸ்லீம்களையும் இங்கு கொண்டுவந்து குடியேற்றி வீடு, காணி என்பன வழங்கப்படல் வேண்டும்.

(7) வேறு அடிக்கடி நடைபெறுகின்ற அநீதிகட்குத் தீர்வு காணக்கோருதல். இவற்றிற்கு முற்றிலும் உடந்தையாக இருக்கின்ற மாவட்ட மந்திரிக் கும் சிங்கள அரசாங்க அதிபருக்கும் பதிலாக முஸ்லீம் ஒருவர் மாவட்ட மந்திரியாகவும் முஸ்லீம் ஒருவர் அரசாங்க அதிபராகவும், நியமிக்கப்படக் கோருதல். உதாரணமாக சில மாதங்கட்கு முன் மாவட்ட அமைச்சரினதும் அரசாங்க அதிபரினதும் விசேட உத்தர வின் பேரில் பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பொத்துவில் பொலிசாருடன் உள்ளாசு குடியேற்றத் திட்டத்தினுள் புகுந்து அங் குள்ள முஸ்லீம்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொழுத்தியுள்ளார். இத வாபிப் பிரச்சனையை நேரில் கண்டறிய அமைச்சர்களை ஜனாதிபதி அனுப்பி வைத்திருந்தபோதிலும், அம்பாறை மாவட்ட அமைச்சரும் அரசாங்க அதிபரும் இதற்கு முரணாக நடந்து கொண்டனர். இவ் வாறு முஸ்லீம்களுக்கு அநீதி விளைவிக்கும் சிங்கள மாவட்ட அமைச் சரையும் அரசாங்க அதிபரையும் இதே மாவட்டத்தில் தொடர்ந்து வைத்திருப்பது தொடர்ந்து பல பிரச்சனைகளையும் தடைகளையும் இழப் புக்களையும் முஸ்லீம்களின்மீது ஏற்படுத்தவே செய்யும். மொத்த சனத் தொகையில் 37.6% மட்டும் கொண்டிருக்கும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் அரசாங்க அதிபராகவும் மாவட்ட மந்திரியாகவும் இருப்பதைவிட எமது இழிநிலைக்கும் அரசாங்கத்தின், துவேஷ மனப் பான்மைக்கும் சிங்கள மயத்திற்கும் வேறு என்ன உதாரணம் வேண் டிகிடக்கின்றது. இப்பொழுதுள்ளவர்கள் அரசாங்க அதிபராகவும் மாவட்ட மந்திரியாகவும் இருப்பதனால் நாம் அடைந்த மேலே விப ரிக்கப்பட்ட இழப்புக்களையும், பாதிப்புக்களையும், அவமானங்களை யும்விடக் கீழ்வரும் மேலதிக சில எடுத்துக் காட்டுக்களையும் கூறுகின் றேன். அப்போது அரசாங்க அதிபராகவும் மாவட்ட மந்திரியாகவும் முஸ்லீம்கள் அம்பாறை மாவட்டத்தில் இருக்க வேண்டும் என்ற உண்மையின் அவசிய உடனடித் தேவையினைத் தெளிவாக உணர முடியும். இதற்கு நான் 1977 தொடக்கம் 1981 வரை நடைபெற்ற சில சம்பவங்களை மட்டும் உதாரணமாக எடுத்துக் கூறுகின்றேன். இவற்றைக்கொண்டு இதற்கு முன்னுள்ள காலத்தில் நடைபெற்ற வற்றையும் ஊகித்துக் கொள்ளலாம்.

(1) நீர்ப்பாசன வசதிகளில் சில முட்டுக் கட்டைகள் அடிக்கடி ஏற்படுத் தப்பட்டு வருகின்றன. குறிப்பாக இடைப்போக வேளாண்மைச் செய் கையின் போது முஸ்லீம்கட்கு நீர்ப்பாசன வசதிகள் மறுக்கப்பட்டுச் சிங்கள மக்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் நீர்ப்பாசன வச திக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. உதாரணமாக 1981ஆம் ஆண்டில் இதுபோன்ற சம்பவம் ஒன்று நடைபெற்றது. பெரியநீலாவணை தொடக்கம் பாணமை வரை முஸ்லீம்கட்குச் சொந்தமான 76,000 ஏக்கர் காணிகளில் 6000 ஏக்கருக்கு மட்டுமே நீர்ப்பாசன வசதி அளிக்

கப்பட்டு பயிர்ச்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் சிங்களப் பகுதியிலுள்ள 19,000 ஏக்கர் பிரதேசத்திற்கும் எக்கட்டுப்பாடுமின்றி முழுவதற்கும் பயிர்செய்ய நீர் வழங்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

(2) உர விநியோகத்திலும் எமக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளது. 76,000 ஏக்கர் கொண்ட எமது பிரதேசத்திற்கு 6,500 தொன் மட்டும் வழங்கப்பட 23,000 ஏக்கர் மட்டும் கொண்ட சிங்களப் பகுதிக்கு 9,000 தொன் உரம் விநியோகிக்கப்பட்டது.

(3) விவசாயக் கடனைப் பொறுத்தவரையில் முஸ்லீம்களின் பகுதிக்கு 8,70,000/- மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் சிங்களப் பகுதிக்கு 13,60,000/- வழங்கப்பட்டது. இத்தனைக்கும் எமது பயிர்ச்செய்கைக் காணி இருபோகமும் 76,000+45,000 ஏக்கர்களாகும். சிங்களவர்களது காணி 16,000+15,000 ஏக்கர்களாகும். எனவே எமது காணி அளவினை விடப் பன்மடங்கு குறைந்த காணிக்குக் கூடிய கடனும் எமக்குக் குறைந்த கடனும் வழங்கப்பட்டுள்ளதை இங்கு அவதானிக்கலாம். இதேபோலவே உழவு இயந்திர விநியோகம், விதை நெல் விநியோகம் தெளிகருவி விநியோகம் என்பனவற்றிலும் எமக்குப் பல அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன.

இவை மட்டுமல்ல போதிய வடிக்கல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் அவர்களின் காணிகளைப் பயிர்ச் செய்கைக்குட்படுத்த முடியாத நிலைக்குத் தொடர்ந்து வைத்து வருவதும் இவர்கள் செய்யும் ஒரு அநீதியாகும். தக்க புள்ளி விபரங்களுடன் கூறினால் 12,805 ஏக்கர் முஸ்லீம்களின் காணிகள் சேனநாயக்கா சமுத்திரத்தில் இருந்து வழிந்தோடும் நீரினால் போதிய வடிக்கல் இன்றி நீர் தேங்கி நின்று சேதப்படும் காணியாகும். இதனால் இப்பிரதேசத்தில் ஒரு போகம் மட்டும் வேளாண்மை செய்யப்படுகின்றது. இதனாலும் எமது பொருளாதாரம் சிதைக்கப்படுகின்றது. மாவட்ட அமைச்சரும், அரசாங்க அதிபரும் நினைத்தால் இப்பகுதிக்குப் போதிய வடிக்கல் வசதிகளை ஏற்படுத்தலாம். இந்நிலைமைகளைப் பார்க்கும் போது மாவட்ட மந்திரியும், அரசாங்க அதிபரும் முஸ்லீம்களாக இருப்பது இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் கூட மிகமுக்கியமானதாகும்.

## REFERENCES


1. Census of Population and Housing, Sri Lanka, 1981
2. Pocket Book Statistics. Department of Census and Statistics.
3. Deegavapi Prathisankarana Sabawa (incorporated) Act No:18, of 1980
4. Gazettee of the Democratic Social Republic of Sri Lanka of April 18, 1980

5. வளர்பிறை மட்டக்களப்புப் பிரதேச முஸ்லீம்களின் குடிமரபுகள், பாலசுந்தரம் இ. பக். 62

6. வளர்பிறை. இலங்கையின் தேசிய சிறுபான்மைப் பிரச்சனைகள் - சமூக அறிவியல் நோக்கு, ஜெயரத்தினராஜா, ஆர். பக். 73 – 79

7. வளர்பிறை. ''மரக்கல மினிஸ்ஸு'' அப்துல் அஸீஸ், ஐ. எல். எம்,

8. Independent (weekly) 1979 – 03 – 06.

9. உதயம். டிசம்பர் 18, வெள்ளிக்கிழமை, 1981

16. The Ceylon Daily News, 1976 - 03 - 09.

10. அல்ஹஸனாத், பெப்ரவரி 1981

11. இன்சிலாப் – 1979/80 — இலங்கை முஸ்லீம்களின் கலாச்சாரப் பாரம்பரியங்கள் – காலிதீன் கே . எம் . எச். பக் 88 – 90

12. தினபதி – 1982–03–06, 1981–11–28, 1982–01–07, 1981–12–14, 1981–12–16, 1981–12–31, 1982–04–05, 1982–03–25.

13. தினகரன் – 1982–02–07, 1982–03–26, 1981–12–16, 1881–10–21

14. வீரகேசரி – 1982–03–07

15. அஷ்ரப், எம். எச். எம். பேட்டி.

---